அசத்ய சத்யங்களும், அநுகூல பிரதிகூலங்களும், மேலும் உண்டாகின்ற நன்மை தீமைகளுடன், பொறுமை பொறுக்காமைகளும், எவ்விடத்திலுண்டாவன; எவர்சிறியர், எவர்பெரியார், எவர் உறவினர், எவர்பகைவர்; யாதும் உன்னலன்றிப் பிறிதுண்டோ; இம்மை மறுமை என்னும் இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி, எவ்விடத்தும் நிறைந்திருக்கின்ற வஸ்துவே."

என்று சொல்லப்பட்டபடி, ஆதியுமந்தமுமில்லாத அந்த முழு முதற் பொருளின் பெருங் கருணையாலும், நம் சகோதரிகளின் அரு முயற்சியினாலும் நம் "வழிகாட்டி" நம்மவர்க்கு உதவிபுரிந்து வருகிறது. யாவும் அப்பரம்பொருளின் அருளாலேயே நிகழ்வதாயினும், பிரத்தியக்ஷ அனுபவத்தில் நம் போன்ற மானிடர் மூலமாகவே நடை பெறக் காண்கிறோம்.

ஆதலின் இச்சஞ்சிகையில் மிக்க அன்புவைத்து இதன் அபிவிருத்திக்காக மிக்க சிரத்தையோடு சுயநலங் கருதாது நம் அரிய தாய் பாஷையில், அரிய விஷயங்களை எழுதி அனுப்பிப் பேருதவி புரிந்து வரும் அறிஞர்களாகிய நம் சகோதரிகளுக்கு, நம் அன்பார்ந்த நன்றியைச் சமர்ப்பித்துக் கொள்வதுடன், அன்னாரின் புத்தி ஞானத்தையும் மெச்சுகிறோம்.

மகா பாரதத்தில் தரியோதனனுதியோரும், பாண்டவரும், சிறுவராயிருந்து படித்து வந்த காலத்தில், துரோணாசாரியார் என்ற அவர்களின் குருவானவர், துரியோதனனினதும், தருமரினதும், புத்தி விசாலத்தையும், மனத்தூய்மையையும், அறிய வேண்டி, அவர்களிருவரையும் அந்நகரைச் சுற்றிப் பார்த்து நல்லவர் யார் கெட்டவர் யாரென்று குறித்து வரும்படி சொல்லியனுப்பினாராம்.

அவர்கள் சரியென ஒப்புக் கொண்டு வெவ்வேறு பக்கமாகப் பிரிந்து சென்று, எங்கும் சுற்றிப் பார்த்து வந்து சேர்ந்தார்களாம். அவர்க

னைப் பார்த்த குரு முதலில் துரியோதனனை நோக்கி, "துரியோதனு! யார் நல்லவ ரென்பதைக் குறித்து வந்திருக்கிறயா" என்று கேட்டாராம். அதற்குத் துரியோதனன் "யாவருமே கெட்டவர் களா யிருக்கிறார்கள்; நல்லவர் என்று ஒருவரை யும் காணேம்" என்றனும்.

அடுத்தாற்போல் குரு தருமரை நோக்கி, தருமா! யார் கெட்டவரென்பதை குறித்து வந்தா யா? என்று கேட்டாராம். துரியோதனன் சுற் றிய நகரையே சுற்றிவந்த தருமரென்ன சொன்னா ரென்றால் "யாவரும் நல்லவராயிருக்கிறார்கள்; கெ ட்டவரென்று ஒருவரையும் காணே"மென்பதே. அவற்றைக் கேட்ட துரோணாசாரியார் மிகுந்த வியப்படைந்து, "அப்படியா! துரியோதனன் கண் களுக்கு யாவரும் துரியோதனனைப் போலவும், தருமரின் கண்களுக்கு யாவரும் தருமரைப் போலவும் காணப்படுகிறார்கள் போலும்" என்றா ராம்.

இவற்றிலிருந்து நாம் அறியக்கிடப்பதென்ன? உலகமே ஒரு தராசுக்கால் போன்றது. அதில் நல்லவர் நல்லதையும், கெட்டவர் கெட்டதையும், பொறுமைசாலிகள் தம் பொறுமையையும், பொறுமையுள்ளவர் தம் பொறுமையையும், அறிஞர் தம் அறிவையும், அறிவற்றவர் தம் மூட த்தனத்தையும் இன்னும் எவரெவர்க்கு எதெது உள்ளதோ அதையே போட்டு நிறுத்துக் கொள் வார்கள் என்பதே. ஆகையால் நாம் முன் சஞ்சி கையில் சொன்னதுபோல் ஆபாசக் குப்பைகளால் நம் வழிகாட்டியின் புனிதத்தன்மையையும், பெரு மையையும் கெடுக்கவிரும்பவில்லை. எம்மாலியன்ற வரையில் சஞ்சிகையின் பெயருக்கேற்ற வியாசங் களை எழுதி வருவோம். அதைப் பார்த்து திருந் தவர்களை மகா சந்தோஷத்துடன் நோக்கி அவர்கள் அறிவை வியந்துகொள்வோம்.

அசட்டுச் செய்கைகளைப் பாராட்டித் தூக்கி நிறுத்த முயலாமல், காற்றுடன் தூசி யெனப் பற க்கவிட்டு விடுகிறோம். ஆதலால் சகோதரிகளே! நம் சஞ்சிகையின் பெயருக்கேற்ற வியாசங்களை யே எழுதி வரும்படி உங்களைக் கேட்டுக் கொள் ளுகிறோம்.

* * *

தரும குணமென்பது மிகவும் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எழுதப்பட்டிருக்கிறது. பெரி யோர்களா லனுஷ்டிக்கப்பட்ட நன்நெறி தவறாது நடந்து, வேதம் விதித்தகாம்யங்களைச் சரிவரநடத்தி வருவதினால் ஆன்மாவிடத்தி லுண்டாகும் அதி சயமான குணமே தருமமாம். இது சொர்க்காதி புவன போகப்பிராப்திக்கு நேரே காரணமாய் நின் று பலனுண்டாகும்வரையில் ஆத்மாவிடத்தடங்கி நிற்குமென்று ஸ்மிருதிகளும், புராணங்களும் கூறுகின்றன. இக்குணமே புண்ணியம் என்பர். புண்ணியம் இன்பத்தையும், பாவம் துன்பத்தை யும் பயக்குமென்பதை யாவரும் தம் மனச்சாட்சி யால் அறிந்து கொள்ளலாம். தருமகுணமுடை யோர் மாட்டு தெய்வபக்தி, சத்தியம், பொறுமை, இரக்கம்முதலியநற்செயல்களும், அஃதில்லாதவர் மாட்டு அவற்றிற்கு மாறான குணங்களும் காணப் படுவது சகஜமே. இப்படியே இத்தரும குணத் தின் அருமையையும், பெருமையையும் விரித் துரைக்கில் இவ்வழிகாட்டி முழுதுமே காணாது.

சகோதரிகளே! நாம் இம்மண்ணுலகை விட்டு நீங்கும்போது நம்முடன் கூட வந்து உதவி செய் வது இத்தரும குணமொன்றே. ஆதலால் எந் நேரத்திலாயினும் பசியென்று வருபவர்களுக்கு இல்லை யென்னாது பசிதீர்த்து ஆதரிக்க வேண்டி யது நமது முக்கிய கடனல்லவா!

* * *

மனுஷன் கழைத்து விழுந்து வீடுவரும்போது அவனை ஆதரவுடன் வரவேற்று உபசரித்து, உண் டிகொடுத்து ஆறுதலளிக்கவேண்டியது மனைவி யின் அத்யந்தகடமையல்லவா? அதைவிட்டுக் கண வன் மிகுந்த பசியோடு சாப்பிட வரும்போது, அந்நேரத்திலேயே மனைவி தன்கஷ்ட நஷ்டங்களை எடுத்துரைத்தால் அக்கணவனுக்கு என்னமாய்த் தானிருக்கும். இவை யெல்லாவற்றையும் அறி ந்து நடக்கும் பெண்மணிகள் சிலரிருப்பினும், இது அறியாதவர்களுக்குத் தகுந்த புத்திமதி சரோஜாவால் எழுதப்பட்டிருக்கிறது.

* * *

"வியாழனுக்கு இவ்வளவு வல்லமையா" என் பதைவாசித்து, உண்மையில் இந்த வியாழனுக்கு இவ்வளவு வல்லமை உண்டா என்று நாமும் ஆச் சரியமுறுகிறோம். "ஆடிக்காற்றில் அம்மி பறக் கிறது"! என்று ஒரு பழமொழி சொல்வார்கள்.

ஆனால் அது அசம்பாவிதமான காரியம் என்றே இதுவரையில் நினைத்திருந்தோம். குழந்தை யொன்று காற்றுடன் பறந்து சென்றுவிட்டதாகப் பத்திரிகையில் பார்த்தும் அதை அவ்வளவாக நம் பவில்லை. ஆனால் இம்மாசம் எட்டாந் திகதி ஞாயிற்றுக்கிழமை அடித்த புயலைப் பார்த்தபின் அது எல்லாம் நடக்கக்கூடிய சங்கதிதான் என நிச்சயித்தோம். நம் மூதாதையார் ஒன்றையும் விருதாவாக உண்டாக்கியிருக்கமாட்டார்கள் என் பதே எமது கருத்து.

* * *

லீலாவதி தன் அறியாமையால் தான் அடைந்த நஷ்டத்தைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறாள். விலையேறப் பெற்ற நேரத்தைத்தான் வீணாகச் செலவிட்டு வந்ததுபற்றியும, பின் தன் கற்றறிந்த சிநேகிதையின் புத்திமதியுடன் வழிகாட்டியில் வெளியான மாமியின் புத்திமதியாலும், செட்டா கவும், சீராகவும் தன் குடும்பத்தை நடத்தி வரு வது அறிந்து நாம் அடைந்த ஆனந்தம் கொஞ்ச மல்ல.

* * *

விவேகானந்த ஆச்சிரம நிர்வாக சபையாரால் 26-12-37ல், இந்து சமய பாடப் பரீட்சைநடத் தப்படுமென்ற விளம்பரம் கிடைக்கப் பெற்றோம். அதன் முழு விபரமும் வேறொரு பக்கத்தில் பிர சுரிக்கப்பட்டிருக்கிறது. மிகவும் அருமையானநே ரக்கமே.

இதற்கு முன்னும் இப்படி ஏதும் நடந்து வருவது, வராதது நம்மவர்க்கு ஒன்றுமே தெரி யாது. நம்மவர்க்கென ஒருசஞ்சிகையோ, பத்தி ரிகையோ இல்லாமல் இவ்வளவு காலமும் இருட் டறையில் இருந்து வந்தோம். ஆனால் நம்மக்க ளில் கற்றறிந்த சிலரின் நன் முயற்சியால் இவ்வழி காட்டியானது வெளிவந்திருக்கிறது. புகைவண் டியோ, மோட்டாரோ கூட சென்றுபுக முடியாத மூலை முடுக்கெல்லாம் நம் வழிகாட்டி சென்று அவர்களுக்கு எல்லாவற்றையும் விபரிக்க முன் வந்துள்ளாள். சகோதர சகோதரிகளே! அவளை ஆதரவுடன் வரவேற்று உபசரிப்பது உங்கள் கடமை. வருஷ சந்தாவை முன்னடி அனுப்பி வந்தால் மிகவும் சௌகரியமாயிருக்கும்.

* * *

சங்கீத வித்வானால் எழுதப்பட்ட சங்கீதமும், அதன் ஒழுங்கான முறையும் நாம் அறியவேண் டியதவசியம். அனேகமாகத் தற்காலத்துப் பெற் றோர் தம்மக்களுக்குச் சங்கீதம் கற்பித்து வரு வதால், அது யாரால்? எப்பொழுது? எவ்விடம்? ஸ்தாபிக்கப்பட்டது, என்பன போன்ற வினாக் களுக்கு விடைகளை அறிந்து கொள்வது அவசிய மல்லவா? கற்றதைகம்மண்ணளவு, கல்லாதுலகள வென்றுற்ற கலைமடந்தை ஓதுகிறுளாம். அப் படியிருக்க அந்தக் கைம்மண்ணில் ஒரு சிறு மண்ணளவிருக்குமா நம் படிப்பு. "நிறைகுடம் தளம்பாது; குறைகுடம் கூத்தாடும்" என்பது போல் அறிவுகொள்ளப் படித்துப் பல நூல்க ளையும் வாசித்து, அறிவை விருத்தி செய்து கொண்ட அறிஞர் குறை குடம் போல் கூத்தாடுவாரா? நாம் இவ்வுலகில் கற்க வேண்டியது இன்னும் அனந்தம் உண்டு. "நான் எல்லாம் அறிந்தவன்" என்று சொல்பவர் களைக்குறைகுடம் என்றுசொல்ல மற்றவர் அஞ்ச மாட்டார்கள் "கற்கக் கசடறக் கற்றபின் நிற்க வதற்குத்தக" என்பது ஒரு அரிய முதுமொழி.

* * *

நம்மக்களை நினைத்து அவர்களுக்கெனப் பாலர் பகுதி யொன்று தொடக்கவேண்டுமென்று கேட் டுக்கொண்ட நேயரின் அபிமானத்தை மெச்சு கிறோம். பாலருக்கு அறிவுக்கேற்ற வியாசங்கள் தம்மக்களைக் கொண்டு எழுதி அனுப்பும்படி, நம் சஞ்சிகையின் அபி விருத்தியை விரும்பிய நேயர் களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சகோதரி ராஜம்மாள் தனது முழு விலாசத் தையும் அறிவிக்காமையால் அந்த வியாசங்கள் வெளியிடப் படவில்லை. சகோதரிகள் தங்கள் பெயரை விளம்பரப்படுத்த விரும்பாவிடில் நாம் வெளியிடமாட்டோம். ஆனால் அவர்களின் சரி யான விலாசம் நாம் அறிந்திருக்கவேண்டியதவ சியம்.

"வெற்றி யாருடையது" என்ற கட்டுரை யின் தொடர்ச்சியும் "சரஸ்வதியால்" எழு தப்பட்டதும், இன்னும் அனேக கட்டு ரைகளும், இடமின்மையால் அடுத்தமாசச் சஞ்சி கையில் பிரசுரிக்கப்படும். சகோதரிகள் அதற்கு ஆயாசமுறாமல் வழமைபோல் எழுதிவரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அத்துடன் கற்றறிந்த தங்கள் நண்பரிடமும் சொல்லி அவர் தம் ஞான த்தை இப்படியான உபயோகமான வழியில் செல விடும்படி புத்தி புகட்டும் படியும் கேட்டுக்கொள் ளுகிறோம்.

—ப—ர்.

தருமகுணம்.

—:o:—

தரும குணமானது ஒருவர் வருந்திய காலத்தில் அதைப்பார்த்து மனமிரங்கி எம்மாலியன்ற உதவியைச் செய்ய வேண்டுமென்று இச்சை கொள்வதேயாம்.

இக்குணமானது சகோதர சகோதரிகளாகிய இருபாலார்க்கும் மிகவும் அவசியமாய் இருக்க வேண்டும். இஃதில்லாதிருந்தால் அவர்களை அதர்மவான்களென்றே உலகத்தோர் இகழ்ந்து பேசுவார்கள்.

மேலும், தர்மங்கள் செய்வதில் பல காரணங்களுண்டு. அதாவது, சிலர் தங்களை அதிக கவுரவமானவர்களென்றும், தர்மவான்களென்றும், ஊரார் மெச்சும்படியாய் அதிக பொருட் செலவு செய்து, தருமஞ் செய்கிறார்கள்.

வேறுசிலர் மனதில் உண்மையான பிரீதியில்லாமல் பிச்சைக்காரர்களின் கூச்சலைக் கேட்டு அதை நீக்க வேண்டுமென்றே பிச்சையிடுகிறார்கள்.

இவ்விதமாகச் செய்வது தர்மமல்ல. இதை அதர்மமென்றே சொல்ல வேண்டும்.

கோபமில்லாமலும், கடுஞ் சொல்லை நீக்கியும் மனப்பூர்த்தியாய் ஒவ்வொருவரும் தம்மாலியன்றதை ஏழைகட்குக் கொடுத்து, அவர்களின் கஷ்டத்தை நீங்கச் செய்வதே மிக்க மேன்மையான தர்மமாம்.

> "இன்சொல் விளைநிலனு, ஈதலே வித்தாக
> வன்சொற் களை கட்டி, வாய்மை யெருவூட்டி
> அன்பு நீர்ப் பாய்ச்சி, அறக்கதிர் வீனவோர்
> பைங் கூழ் சிறுநாலிச் செய்."

என்ற அறநெறிச் சாரத்தின்படி, முகமலர்ச்சியோடு கூடிய, இனிமையான சொல்லை விளை நிலமாக்கி, ஈகையை அதில் வித்தாக விதைத்து, கடுஞ் சொற்கள் என்பனவற்றை களைகளாகப் பறித்து, உண்மை யென்பதை நீராகப் பாய்ச்சி, தர்மம் என்னுங் கதிர் தள்ளும்படியாக, யாம் ஓர் அற்பப் பயிரிட வேண்டும். வரும் ஏழைகளிடத்தில் நாம் இரங்கி எப்போதும் தயவு தாட்சண்யமாக நடக்கவேண்டும். அவர்களுடன் கோபமென்றதைச் சற்றுகிலுஞ் சாதிக்கக் கூடாது.

"ஒப்புடன் முகமலர்நீதே உபசரித்துண்மை பேசி
உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே யமிர்தமாதும்
முப்பழ மொடுபா லன்னம் முகங் கடுத்தீடுவாராகிற்
கப்பிய பசியினோடு கடும்பசி யாதுந்தானே."

என்றபடி, நாம் உண்மையான பற்றுதலுடன் தக்க உபசாரங்களைச் செய்து ஒருவருக்கு உப்பில்லாத கூழை யிட்டாலும் அது தேவாமிர்தத்திற்குச் சமானமாகும். அப்படியில்லாமல் முகங் கடுகடுப்புடன் முப்பழங்களோடு கூடிய பாலன்னத்தை ஒருவருக்கு இட்ட போதிலும் அது யாதொரு பலனையுங் கொடாமல் முன்னிருந்த பசியிலும் பார்க்க அதிக பசியை உண்டுபண்ணி விடும்.

வேறு சிலர் தாங்கள் தர்மஞ் செய்ய விருப்பமில்லாதிருப்பதோடு மற்றவர்கள் செய்வனவற்றையுந் தடுக்கப் பார்க்கிறார்கள். இது பெருங் கொடிய பாவமாகும். "ஈவது விலக்கேல்" என்று ஔவையாராலும் அருளப் பெற்றிருக்கிறது.

"இடுக்கணுல் வறுமையாகி யேற்றவர்க்
கீசைந்த செல்வங்
கொடுப்பதே மிகவுநன்று தீற்றமே
யின்றி வாழ்வார்
தடுத்ததை விலக்கினோர்க்குத்
தக்கநோய் பிணிகளாகி
உடுக்கவே யுடையுமின்றி
உண் சோறும் வேல்லமாமே."

என்றபடி, துன்பமடைந்து தரித்திரத்தால் வருந்தியாசிப்பவர்க்கு மனமகிழப் பொருள்கள் கொடுக்கின்றவரைத் தடுத்து விலக்குகின்றவர்களுக்குத் தகுதியான துன்பந் தரத்தக்க பிணியுண்டாகி, உடுக்க வஸ்திரமுமின்றி, சாப்பிடுதற்குரிய அன்னமுங் கிடையாமல் வெல்லம் போல அருமையாகும். அதற்கு உதாரணமாக இங்கு ஓர் சிறு கதை எழுதப்படுகிறது. அதாவது, ஒரு நாள் ஒரு சிநேகிதரின் வீட்டிற்குப் போனேம். அப்போ வீட்டிற்குள் இருவர் சண்டை பிடிப்பதையும், ஒரு ஏழை பசியால் இரைப்பவும் வாடி வீட்டின் முற்பக்கத்தில் நின்றதையுங் கண்டோம். பின் சற்று நேரத்தில் வீட்டுக்காரர் வந்து பின் வருமாறு தன் கதைகளை சொல்லத் தொடங்கினார். தான் ஏதோ அலுவலாக வெளியே போய் வீட்டுத் திரும்புஞ் சமயம் இந்த ஏழைபைக் கண்டதாயும், அவன் பசியால் இரைப்பவும் நொந்து வருந்தி மூழ்சதாயும் அறிந்து, அவனைத் தன்னில்லத்திற்கு அழைத்து வந்து தன் மனைவியிடம் "இந்த ஏழையின் பசி தீரக் கொஞ்சம் அன்னமிடு" என்று சொன்னதாகவும், அதற்கு அவள் "சரி சரி உமக்கு வேறு வேலையில்லையா? வழியிலே எதிர்ப்பட்டவர்களை எல்லாம் அழைத்து வருகிறீரே; அவர்களுக்கு இங்குயார் இருக்கிறார்கள் சமைத்துப் போடுவதற்கு; இன்று

காலமே எழுந்திருக்கும் பொழுது யார் முகத்தில் விழித்தேனே தெரியாது. அப்போ தொடங்கிய தலைவலி இன்னந் தீரவில்லை" யென்று முணு முணுத்துக்கொண்டு முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள். இப்படிப்பட்ட மனைவியை வைத் துக் கொண்டு நான் எப்படித் தருமஞ் செய்கி றது. என்று மிகவும் வருந்திச் சொல்லிமுடித் தார்.

"காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதி லொரு கருமஞ் செயியவே—ஓதுகலை
யெண்ணிரண்டு மோன்றுமதி யென்முகத்தாயி
கண்ணிரண்டு மொன்றையே காண்."

என்றவாறு இரண்டு கண்களுஞ் சேர்ந்து ஒரு பொருளைப்பார்ப்பது போல நாயகனும், நாயகியும் ஒரு மனதாய் இப்படிப்பட்ட நற்கருமங்களைச் செய்தால் மாத்திரம் நிறைவேறுமே யல்லாமல், அவர்களிருவரும் வெவ்வேறு மனத்துடன் எவ் விதமான காரியத்தைச் செய்த போதிலும் அவை கள் சற்றுகிலும் நிறைவேற மாட்டா.

ஆனபடியால் நாம் நமது கணவருடைய வார்த் தைக்குத் தடை சொல்லாமல் அவர்களின் மனை நிலைமையை அறிந்து அதன் வழியே யாமும் ஒரு மித்த மனத்துடன் இவ்வருஞ் செய்கையாகிய தர் மத்தைச் செய்வோமாயின், எங்களெல்லோருக் கும் இம்மையிலும், மறுமையிலும் மேன்மை யுண்டு. ஆனபடியால் நாம் எப்பொழுதும் தர்ம சிந்தனையாகவும், தர்மஞ் செய்கிறவர்களைப் பார்த் துப் பொறுமைப்படாமலும், எப்போ ஏழை வரு வான், எப்போ அவன் மனங் குளிரச் செய்வோம் என்று, எம்பெருமானுகிய சர்வேஸ்வரனை என் றும் வழுவாமல் மனதிற் தியானிப்போமாக. மன விருப்பதோடு தருமம் செய்ய எண்ணுபவர் களுக்குக் கடவுளும் சோதனையின் பின்னால் உதவி செய்வாரென்பதை வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்ட "ஈசனின் சோதனை" என்பதால் அறியலாகும்.

மகன்:—

அம்மா! கண்ணீர் சும்மா பொழிவதேன்!
அம்மா அதனை அருளல் வேண்டும்.

தாய்:—

விதியின் பயனால் வேகுதென் குப்பி
அதனை உனக்கு நானறைகுவ தெங்ஙன்?
பரமன் நம்மைப் பரம ஏழையாய்த்
தரணிதன்னில் தாழ்வுடன் விடுத்தனன்
அன்றுடம் நாம் அன்னம் புசிக்க
மன்றாடி நிற்பதை மாயனே யறிவான்
இன்றுதயத்தில் இரண்டு விருந்தினர்
வந்தனர் மகனே வழியென் செய்வேன்?

மகன்:—

அன்னாய்! இதற்கு அழுதாற் பயனென்?
அன்னோர் பசியை ஆற்றுதல் நங்கடன்
இன்றைய நமது எளிதா முணவை
உற்றவர்க்களித்து உவகை கொள்வோம்.

தாய்:—

செல்வா நம் விதி செய்தவா றென்னே!
பொல்லா வறுமை புரிந்தது கேளாய்!
இட்ட பிச்சையை எடுத்து வருகையில்
துட்ட மாடொன் றெனைத் தூக்கி எறிந்து
அரிசி யனைத்தையும் அலங்கோலமாக்கி
அரி சினத்துடனே அகன்றது மகனே!
மணியோ பன்னிரண் டடித்தது வழியைத்
துணியா துள்ளம் துயரொடு தவித்து
வாலறி கடவுளை வணங்கித் துதித்து
ஆலயம் சென்றேன் அழுதிடும் வேளை
ஆகிவிட்ட தினி அகப்படா தன்னம்
ஏகுக வென்றன சென் செய்குவேனினி.

மகன்:—

சோதனை! சோதனை ஈசனின் சோதனை!
வாதனை யொழிக வந்தேனீதோ.
(வேகமாய் வெளியே சென்று ஓர் வீட்டின்
வாயிலில் நின்று)
மன்பதை யோம்பும் மாட்சி யுடையீர்!
அன்னதா தாக்களே! அடியனுக்கிரங்கி
அரும்பசி யாற்றவீர் அழுது படைப்பீர்!
கொடுமை பசியோ கொலகின்ற தென்னை

வீட்டுக்காரி:—

யாரடா சனியன் யாரடா அங்கு
யாரடா பிச்சை யாவத் தேரும்
பிச்சை பிச்சையெனப் பிடுங்கித் தின்பது.
பிச்சையு மில்லை மிச்சமுமில்லை
தொந்தரை செய்யாது தொலைந்து போதடி
வந்தனை தருவேன் வல்லே அகல்க. [யா

மகன்:—

ஐயனின் செயலோ ஆகா இதுவும்
இப்பொழுதெங்கன் ஏகுவது நாம்
வாத்திய முழக்கம் வருகின்ற விடுதியில்
மீத்த அன்னம் மிசையத் தருவார்!
இன்னே புரிவாய் இறைவா நீயருள்
என்று நினைந்து ஏகின்ன் தூயவன்
மன்றல் வீட்டினை மாண்புடனடைய
நன்றுப் தேங்காய் நற்கதலிக்கனி
தட்டில் தட்சிணை தடையின்றிக் கிடைக்க
மட்டில்லா மகிழ்வுடன் மன்னை வந்து
தான் தொடு வந்ததை தாயிட மளித்து
கான்படு வெயிலிற் கடைக்குச் சென்று
வேண்டிய வாங்கி விரைவில் வந்து
தூண்டிய உள்ளம் துள்ளிக் குதிக்க
இயன்ற வளவில் இன்பமாய்ச் சமைத்து

பயந்த அன்புடன் விருந்தினர்க் களித்தனர்
தேங்காய்க் கதலி தீஞ்சுவைச் சர்க்கரை
பாங்குடன் சேர்ந்த பாக முண்டு
உடலும் உயிரும் ஒருங்கே இன்புற
கடவுள் அன்று காட்டிய வழியை
கருத்தில் எண்ணிக் களிவெறிகொண்டு
வருத்தம் நீங்கி வரிசை பெற்றார்கள்
என்றுங் கடவுளே இறைஞ்சி ஏத்தும்
அன்பருக் கபயம் அளித்தே காப்பான்.

அமிர்தம்.

பெண்கள் கல்வி.

தோன்றி மறையும் தன்மையதான இவ்வையக மீதில் மனுஷர் யாவரும் சுகமாகவும் சந்தோஷமாகவும் ஜீவிப்பதற்குக் கல்வியறிவு இன்றியமையாத அவசியமுள்ளது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று ஔவையாரும், "கண்ணுடையரென்போர் கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையரென்போர் கல்லாதவர்" என்று திருவள்ளுவநாயனாரும் சொல்லியிருக்கிறார்கள். இது யதார்த்தமே. கல்வியறிவுள்ளவர்கள்தான் கண்ணுள்ளவர்கள். கல்வியறிவில்லாதவர்கள் புண்ணுள்ளவர்கள்போல மகா குறைவுள்ளவர்களாயிருக்கிறார்கள். மக்களாற் பெற்றோரெய்தும் மகிழ்ச்சி மற்றை பொருளாகவேதானிருக்கும். அவரெய்தும் துன்பமும் அச்சமும் அத்தன்மையத்தே. அறிவும் ஆற்றலும் ஆன்ற நற்செயல்களும் மக்கட்கே சிறந்தன. சான்றோனெனிய மகன் ஈன்றோர்க்கு உவப்பை ஊட்டுகிறான். சால்பிலா வொருவன் ஈன்றோரின் மானத்தைக் கெடுக்கிறான். சில பெற்றோர் தங்கள் பெண் பிள்ளைகள் பத்துப் பன்னிரண்டு வயசானவுடன், படித்தது போதுமென்று வீட்டிலேயே நிறுத்தி விடுகிறார்கள். படிப்பின் அருமை அவர்களுக்கே தெரியாததினாலே, படிப்பின் மேன்மையைப்பற்றிப் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுமில்லை; அதின் நன்மை அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று பிரயாசப்படுகிறதுமில்லை. ஆண் பிள்ளைகள் படித்தால் உத்தியோகம் செய்வார்களென்றும், பெண்பிள்ளைகள் படித்தால் பெருமை உண்டாகி விடுமென்றும், அடக்கம், ஒழுக்கம் இருக்கமாட்டாதென்றும், பல தீமைகள் உண்டாகுமென்றும், சாதாரணமாய்ச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். கெடுமதியுள்ளோர் என்றும் கெட்டே தீர்வர்; மற்றவர் கல்வியறிவு பெற்றால் அதன் மூலம் நற்பொருட்களை யறிந்து, ஒருவாறு ஒழுக நடப்பார்கள். நம் நாட்டில் முன்பு வாழ்ந்த நங்கையர் திலகங்களையும், அவர்கள் வாழ்ந்த முறையையும் அறியுமாறு செய்தல் வேண்டும். அவ்வருமணிகளின் கதையைக் கூறும் தமிழின் இனிய உயரிய செய்யுள்களை அவர்கள் நுகர்தல் வேண்டும். இதற்குக் கல்வி திறம்பட இருந்தாலன்றிக் கூடாது. நல்ல வெண்பாவை, நைடதத்தைப் படித்துத் தமயந்தியின் நறுங் குணங்களை அறிதல் வேண்டும். "சொற்ப படிப்பு தீமை தரும்." "நிறை குடம் தளம்பாது. குறை குடம் தளம்பும்" என்றும், பழமொழி வண்டு. "எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும் அக்குடியிற் கற்றோரை வருக என்பர்," "அறிவுடை ஒருவனே அரசனும் விரும்பும்," என்பன போன்ற அநேக செய்யுட்கள் கல்வியின் மாண்பைப் பற்றிக் கூறுகின்றன.

இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளே! பெண்கள் கல்வியைப் பற்றிச் சிறிதேனும் தப்பபிப்பிராயங் கொள்ளாதீர்கள். ஔவையார் ஆத்திசூடி போலொத்த அநேக பாடல்களையெல்லாம் இயற்றியிருக்கிறார்களே! பிரமாவினுடைய பெண்சாதி சரஸ்வதியானவள் இன்னும் படித்துக் கொண்டிருப்பதாக நூல்கள் அறைகின்றன. ஆதிகாலத்தில் உலகம் முழுவதையும் வெகு புத்தியோடு ஆண்டு வந்தது விக்டோரியா சக்கரவர்த்தினி என்னும் ஓர் பெண்ணரசிதானே. "சிறுமையிற் கல்வி சிலையிலெழுத்து." சிறு வயசிலேயே பிள்ளைகளைப் படிப்பிக்கத் தொடங்கி விடவேண்டும். ஆண் மக்களைப் போலவே பெண் மக்களையும் படிப்பிக்கிறது மகா முக்கியமாயும், அவசியமுமாயிருக்கிறது.

குலமகட்கழகு தன் - - - - - கொழுநனைப் பேணுதல்.

இலங்காபுரியின் பிரதான பட்டணங்களில் ஒன்றாகிய கண்டியின் வடபாகத்தில் மகாவலி கங்கை என்னும் நதியானது எல்லா ஜீவராசிகளின் மனதையும் ஒருங்கே கவர்ந்து அதி உன்னத சிறப்புடன் வெகு அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது.

பெண்மணிகள் அன்ன நடையுடன் சங்கள் அழகான இடையில் பெருத்த குடங்களைச் சுமந்து தேவமாதர்களோ எனும் ஐயுறும் வண்ணம் ஆற்றில் ஸ்னானம் செய்வதற்காகப்போய்க்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களில ஒரு பெண்மணி சற்று வேகமாக வந்து ஆற்றங்கரையை அடைந்தாள்.

எப்பொழுதும் கிராமவாசங்களில் ஆறு, வாய்க்கால் குளம், கிணறு முதலான இடங்களில் ஸ்திரீகள் ஒன்று கூடி அவரவர்களுக்குப் புதிதாகத் தெரிந்த விஷயங்களை ஒருவருக்கொருவர் சொலிக்கொண்டு பிரிவார்கள். வீட்டிற்கு வந்ததும் வீட்டில் உள்ளவர்களுக்கு தெரிந்தவிஷயங்களைச் சொல்லி, இந்த விதமாகவே அவர்களின் புதினம் அச்சியற்றும் கருவி இல்லாமலேயே ஊர் முழுவதும் பரவி விடுவது வழக்கம்.

நதியை நோக்கி வேகமாகவந்த ஒரு பெண்ணை ஜலத்தில் நின்று பார்த்துக்கொண்டு நின்ற ஒருமாது நோக்கி, "ராதா! என்னவிசேஷம்? இன்றையதினம் இவ்வளவு தாமதமாக வந்திருக்கிறாய்? நீ என் வழக்கத்தைக் கொண்டிருக்கிறாய் போல் இருக்கிறது. ஒருசமயம் ஸ்னானத்திற்கே வராமலிருந்து விடுவாயோ என்று நினைத்தேன்" என்றாள்.

ராதா:—விஜயம்! நான் என்றைய தினமாவது கங்கை ஸ்னானத்திற்கு வராதவறியதுண்டா? காலையில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்னானம் செய்தால் சரீரத்திற்கு அளவற்ற ஆரோக்கியமும் மனசுக்குச்சந்தோஷமுமாயிற்றே! இன்றையதினம் என் புருஷனுக்குச் சற்றுத் தலைவலியாக இருந்தபடியால், கொஞ்சப்பானம் தயாரித்துக்கொடுத்து விட்டு வந்தேன். அதனால்த்தான் சற்றுநேரமாகி விட்டது. நீ ஒரு தினமாவது இவ்வளவு சீக்கிரம் ஸ்னானத்திற்கு வருவதை நான் பார்த்ததே கிடையாது! இன்றைய தினம் என் வந்து விட்டாய்?

விஜயம்:—ராதா! என்னென்று சொல்வேன்! வீட்டில் என்மாமியின்தொந்தரவுகள் உனக்குத் தெரியாதா? அவளிருந்தால் என்னை ஸ்னானத்திற்குப்போகவிடமாட்டாள். அவள்நேற்று ராத்திரி புறப்பட்டு பெண்வீட்டிற்குப்போய் இருக்கிறாள். என் புருஷன் உத்தியோக விஷயமாகக் கண்டிக்குப் போகவேணுமாம். அதற்கு ஒன்பது மணிக்கு சமைத்துப் போட்டவேண்டும். அதற்காகத் தான் இவ்வளவு சீக்கிரம் வந்தேன். வீட்டில் ஒரு பண்டமும் கிடையாது. எல்லாம் பெண் வீட்டிற்கு மூட்டை கட்டிவிட்டாள். இப்பொழுதே புருஷரிடம் எல்லாவற்றிற்கும் சொல்ல வேண்டும். சொல்லாவிடில் சாயங்காலம் ஐந்து மணிக்குத்தான் வருவார்.

ராதா.—விஜயம்! நீ சொல்வதைக் கேட்க மிகவும் வருத்தமாக இருக்கிறது. உன் புருஷர் வேலைக்குப் போனால், உண்பதற்குத்தான் வருவார் என்று முன் ஒரு தினம் உரைத்தாயே; நீ எப்பொழுது சாமான்களுக்கு அவரிடம் சொல்வாய்?

விஜயம்:— ஏன்? சாப்பிடும் பொழுது தான் சொல்வேன். வாய்புசித்தால் காது என்ன செய்கிறது? கேட்டுக்கொண்டே பணமோ, காசோ அவர் கொடுத்தால் வேண்டியதை வாங்கிக்கொள்வேன்.

ராதா:—அடராமா! என்ன நீ இப்படி உரைக்கிறாய்? நீ மிகவும் படித்தும் புத்திசாலியாக இருந்தும் இப்படி உரைக்கிறாயே.

மேலும் புருஷர்கள் புசிக்கும் பொழுது நாம் அவர்களுடன் சந்தோஷமாக வார்த்தையாடவேண்டுமேயல்லாது, குடும்ப விஷயங்களைப்பற்றியோ அல்லது மனசுக்கு வருத்தம் வரக்கூடிய வார்த்தைகளோ ஒன்றும் பேசவும் கூடாது; ஒரு விதமான தொந்தரவும் செய்யக்கூடாது.

உனது புருஷர் மூற்கோபமாகவும், பொறுமையற்றவராவும் இருந்தால் நீ என்ன செய்வாய்? அப்படிப்பட்டவர்களிடம் ஒருவார்த்தையாகுதல் பேச முடியுமா? மூற்கோபம் உள்ளவர்களுக்குச் சாப்பிடும் பொழுதுதான் அதிகமாகோபம் வருமென்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன்.

மனுஷியானவளும் மூடத் தனமுள்ளவளாக நடந்தால் அந்த குடும்பம் நன்மை அடைவது எங்ஙனம்?

புருஷர்கள் மிக்க சிரமப்பட்டு ஓடி ஆடி வீட்டிற்கு வந்தால்மனைவியானவள் இன் சொல்லால் அவர்களை வரவேற்று,

"குலமகட் கழகு தன்
கொழுநனைப் பேணுதல்"

என்றபடி அவர்களுக்குப் பரிவுடன் அன்னமிட்டு உண்பித்த பிறகு ஆகவேண்டிய காரியங்கள் இருந்தால் சொல்லவேண்டுமேயல்லாது சில மூடப்பெண்களைப் போல், புருஷர்கள் ஓழிந்திருக்கும் வேளையெல்லாம் விட்டு, உண்ணும்போதே சொல்ல வேண்டியவைகளைச் சொல்ல அவர்கள், இவர்கள் சொல்லும்விஷயத்தில் மனது லயித்து அரை வயிறு கூட நிரம்பாமல் ஆகாரத்தில் நினைவற்றுப்போய் எழுந்து விடுகிறார்கள். ஸ்திரீகளுக்கு புருஷரை மகிழ்விப்பதே யாவற்றிலும் முக்கியமானது.

பெண் மக்களின் முக்கியதர்க்குணம் புருஷர்கள் உண்ணும்பொழுது தொந்தரவுசெய்வது தான்.

இனி ஒருக்காலும் புருஷரை உண்ணும்பொழுது துஹிம்சை செய்யாதே. நான் இவ்வளவு உரைத்ததற்கு என்மேல் ஆயாசப்படாதே.

விஜயம்:—ராதா! நான் புத்தி அடைந்தேன். இனி நீயே என் குரு; இனி ஒருக்காலும்நீ உரைப்பது தவறி நடக்கமாட்டேன். உண்மைச் சிநேகத்திற்கு மற்றெதுவும் ஈடாகமாட்டாது.

ராதா:—விஜயம்! உன்நன்மையைக் கோருகிறவளான்படியால் என் கடமையை நான் உனக்குரைத்தேன். நீ அதன்படி நடப்பதாகச் சொன்னதே எனக்கு அளவற்றசந்தோசம்.

நேரமாயிற்று; இருவரும் வீட்டிற்குப்போகவேண்டும் என்று சீக்கிரம்ஸ்னானம்செய்து, வீட்டிற்குச் சென்றார்கள்.

தனது ஆருயிர் தோழியின் புத்திமதிகளைச் செவியுற்ற விஜயாவானவள் விரைவாகவீடுசென்று தான் சேகரித்து வைத்திருந்தபணத்தில் சொற்பமெடுத்து வேண்டிய பொருட்களை வாங்கி வந்து அதிசீக்கிரமாக சமையல் செய்து தனது புருஷனுக்குப படைத்தாள்.

என்று மில்லாத அவள் முகமலர்ச்சியையும், அன்பையும் கண்ட அவளது கணவன், அதி ஆச்சரிய முற்றவனாய், விஜயா! ஏது, என்று மில்லாத முகமலர்ச்சியுடன் இன்றுகாணபடுகிறாயே; என்ன விசேஷம்? என்று வினவினன்.

விஜயம்:—அன்பரே! நான் இவ்வளவு காலமாகத் தங்களுக்குச் செய்த பிழைகளை எல்லாம் பொறுத்தருள்வீராக.

இன்று என தரியதோழி ராதாவின் மூலமாக நான புத்தி அடைந்தேன் என்று அவன்பாதங்களில் வீழ்ந்தாள்.

இதனைக்கண்ணுற்ற அவள் நாயகனும், அதி வியப்போடும் ஆவலோடும் அவளைத் தூக்கி மடியிலிருத்தி, "என் அன்பிற்குகந்த காதலி! நீ இதுவரையிலும் அறியாமல் செய்த பிழைகளைப் பொறுத்தேன். நீ இவ்வளவாக மனம் திரும்பியதே எனக்கு அளவற்ற சந்தோசம்.

"பேதமை என்பது மாதர்க்கணிகலம்."

கண்ணே கவலைப்படாதே" என்று சொல்லி அவளைத் தேற்றினன். அன்றுமுதல் அவர்கள் இருவரும், பூவும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும், நகமும் சதையும் போலவும் இன்புற்றிருந்தார்கள்.

—ஸரோஜா.

வியாழனுக்கு இவ்வளவு வல்லமையா?

வருஷம் பிறந்தது செவ்வாய்க்கிழமை. அதன் பின் இரண்டு கிழமைகளாக என் சினேகிதிகளும் வரவில்லை. நானும் போகவில்லை. வேறும் பட்டினப்பக்கத்து சிநேகிதிகள் யாரும் வருவார்களென்று எதிர் பார்த்திருந்தோம். அத்துடன் வருஷப்பிறப்பிற்கு என் சிறியதாயார் மூவாரிலிருந்து வந்திருந்தார்கள். எங்கள் வீட்டில் வருஷப்பிறப்பிற்கு வருவார் போவார்களும், விருந்தினர்களின் கொண்டாட்டமும் எல்லாம் வெகு குதூகலமாயிருந்தது.

எல்லாச் சந்தடியும் அடங்கி அவரவரே தங்கள் வீடு போய்விட்டார்கள். ஆனால் என் சின்னம்மா மட்டும் போகவில்லை. அவர்களை நான் அழைப்பது போலவே என் குழந்தைகளும் சின்னம்மா வென்றுதான் அழைப்பார்கள். அது என் சிறிய தாயாருக்குப் பெரிய சந்தோஷம். பிள்ளைகள் என்னை அம்மாவென்றும், தன்னைச்சின்னம்மாவென்றும் அழைப்பதால் தன் வயது குறைந்து விட்டதாக அவர்கள் எண்ணம்.

இரண்டு கிழமைகளால், அதாவது வருஷம் பிறந்து இரண்டு கிழமைகளால், என் சிநேகிதிமார் யாவரும் வந்திருந்தார்கள். அதில் மூவரை நீங்கள் அறிவீர்கள். ஆனால் மற்ற இருவரும் உங்களுக்கு புதியவர்களாகையினால், அவர்களை

உங்களுக்கு அறிமுகப்படுத்திவிடுகிறேன். எங்கள் வீட்டுப் பக்கலில் இருக்கும் சகோதரிகளில் அவர்களிருவருமும்தான் சிறு குழந்தைகள் உள்ளவர்கள். அவர்களில் ஒருத்தி பெயர் சுசீலா; அவள் இந்தியச் சகோதரி. மற்றவள் பெயர் ஞானமலர்; அவள் யாழ்ப்பாணத்துச் சகோதரி. இவர்கள் யாவரும் என் ஆப்த நண்பர்களே. இவர்களிருவரும் கைக்குழந்தைகள் இருப்பதனால் அதிமாக எங்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளாவிடினும், முக்கியமான விஷயங்களில் சேர்ந்து கொள்ளாமலிருப்பதில்லை.

வருஷம் பிறந்து மூன்றும் புதன்கிழமைதான் யாவரும் எங்கள் வீடு வந்திருந்தது. நாங்கள் பல கதைகளினுமாக மிகுந்த குதூகலமாய் பொழுதைப் போக்கினோம். சாப்பிட்டபின் களைப்பாறிக் கொண்டிருந்த என் சிறிய தாயாரும், எங்கள் சத்தம் கேட்டு எழும்பிவந்து எங்களுடன் உட்கார்ந்தார்கள்.

என் சிறிய தாயார், முன்பும் அடிக்கடிவந்திருக்கிறார்களாதினால் யாவரும் அவர்களை அறிவார்கள். அவர்களும் சின்னம்மாவென்றுதான் என் சிற்றன்னையை அழைப்பது.

உட்கார்ந்த சின்னம்மா, "என்னடியம்மா இவ்வளவு சத்தம் வைக்கிறீர்கள்? புருஷர் வெளிக்கிட்டால் இப்படித்தானு ஒவ்வொருவீட்டிலும் சேர்ந்திருந்து கொண்டு கொம்மாளம் அடிக்கிறது! உங்களுக்கு வீடு வாசலில் வேலை கீலை இல்லையா"? என்றார்கள். (இது கேட்ட நான் என் சிநேகர்கள் ஒருவேளை கோபித்துக் கொள்ளப் போகிறார்களோ என்று பயந்தவளாய்) "ஏன் சின்னம்மா! அவர்கள் எங்களைப்போல் சாப்பிட்டு நித்திரை கொள்பவர்களல்ல; வேலைகளுடன்தான் வந்திருப்பார்கள். இதுவாயால்பொழுது போக்குடனையால்வேலையும் முடிந்துபோம்; வேலைசெய்வதேதெரியாமல் பொழுதும் போய்விடும்" என்றேன். அவர்களும் தங்கள் தங்கள் தையல்களைக்காட்டினார்கள். சரஸ் தன் குழந்தைகளின் பள்ளிக் கூடச் சட்டைக்குப் பொத்தான் கட்டக் கொண்டு வந்திருந்தாள். அமிர்தம் தன்புருஷன் கைலேஞ்சிக்கு நூலெடுத்துத் தைக்கக் கொண்டு வந்திருந்தாள். தங்கா தன் குழந்தையின் சட்டைக்கு நூலால் ஸ்மொக்கிங் செய்யக் கொண்டு வந்திருந்தாள். மற்ற இருவரும் தங்கள் குழந்தைகளையே கொண்டு வந்திருந்தார்கள். இவற்றைப் பார்த்த சின்னம்மா 'அப்படியானால் சரிதான்; நீங்கள்நேரத்தையும் வீணுக்காமல் வேலை செய்து கொண்டே உங்கள் பொழுதையும் சந்தோஷமாகக் கழிக்கிறீர்கள். உங்கள் சமத்தியாருக்குண்டு. இருந்தாலும் சொல்லுகிறேனென்று கோபித்துக்கொள்ளாதீர்கள். நாங்கள் தணி உடுத்துவது மரியாதைக்காகவா; அழகுக்காகவா சொல்லுங்கள் பார்க்லாம்' என்று ஒரு கேள்வி கேட்டு நிறுத்தினார்கள்.

சின்னம்மாவுக்கு ஏதுமொரு குறை சொல்லிக் கொண்டு இருந்தால்தான் பொழுது கழியும். இனி என்ன துவக்கப் போகிறார்களோ தெரியவில்லையே, என்று யோசித்தபடி பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தேன்.

சரஸ், மரியாதைக்குத்தான் என்றாள். தங்காவும் ஒத்துக்கொண்டாள். மற்றவர்கள் ஒன்றும் பேசாமல் என்னைப்போல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அமிர்தம் மட்டும், "ஏன் இரண்டிற்கும்தான்" என்றாள். இதைத்தான் சின்னம்மா எதிர்பார்த்தார்கள் போலும். ஏனெனில், "அப்படிச்சொல்லு மோனை. அதுதான் அழகு; தங்கள் உடம்பில் கூடிய பாகத்தை வெளியே காட்டிவிடுவதுதானு அழகு" என்று சிரித்தபடியே கேட்டார்கள். 'அப்படியல்ல சின்னம்மா! அழகான துணிகளை வாங்கி அழகாக உடுத்தினால் மரியாதையுடன், அழகாகவும் இருக்கும்தானே' என்றுவஞ்சனையின்றி மொழிந்தாள் அமிர்தம்.

சின்னம்மா: அழகான துணி என்றால் என்ன? கறையானரித்ததுபோல் ஓட்டை ஓட்டையாயிருக்கும் அதுதானே? அப்படித்துணியில் உள்ளுக்கு ஒன்றுமில்லாமல் சட்டை போட்டுக்கொள்வதுதான் அழகோ?

அமிர்தம்: அப்படி யார் உள்ளுக்குப் போடாமல் சட்டை போட்டுக் கொள்கிறார்கள்?

சின்: ஏன்! நீ இப்போ உள்ளுக்குச் சட்டை போட்டிருக்கிறாயா?

அமி: ஏன் போடாமலென்ன. இந்தச் சேலைக்கு ஏற்ற நிறமாய் இதோ உள்ச்சட்டை போட்டிருக்கிறேனே, என்று கழுத்துப்பக்கத்தால் காண்பித்தாள்.

சின்: உள் சட்டை போட்டிருக்கிறாயா? இப்படியான கையில்லாச் சட்டைக்கு உள்ச் சட்டை போட்டாலத்தானென்ன, இல்லாவிட்டால்த்தானென்ன.

(அமிர்தம் சொன்னதைச் சொல்லுமுன், நான் உங்கள்காதில் ஒன்று சொல்லிவிடுகிறேன். என்னவெனில் அமிர்தம் ஆங்கிலம் கற்றவள். உண்மையில்கையில்லாச் சட்டையையேபோடுபவள். அது அதிகமாய் வகிச் சட்டைதான். கழுத்தும் மிக ஆளமானதே. அதற்கேற்றப் போல்தான் உள்ச் சட்டையும் மிக ஆளமான கழுத்துடன், அந்தச் சேலைக்கு ஏற்ற நிறமாய்ப் போடுவாள். அவள் உள்சட்டைக் கழுத்தை ஆளமாயும், சேலையை முதுகின்மேல் உயரமாயும் கட்டுவதால், பின்னுக்குப்

பார்த்தால உன்ச்சட்டை போட்டிருப்பதே தெரியாது. ஆனல் கழுத்துப் பக்கக்கயிற்றிலிருந்து கண்டு பிடித்திருக்கலாம். சின்னம்மா உண்மையில் தெரியாமலோ, வேண்டுமென்றுதான் கேட்டார்களோ தெரியவில்லை.)

அமி: என்ன சின்னம்மா! கையில்லாச் சட்டைதானே இப்போ ஆங்கிலம் படித்த அநேகர் போட்டுக்கொள்கிறார்கள்.

சின்: ஓகோ! கையில்லாச் சட்டைதான் ஆங்கிலம் படித்தவள் என்றதற்கு அடையாளமோ? ஏன் எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் ஆங்கிலம் படித்த பெண்கள் எத்தனையோ பேரிருக்கிறார்கள். அவர்களெல்லாம் மரியாதையாகத்தான் சட்டை போட்டுக்கொள்கிறார்கள். உன் கழுத்தைப பார்க்கவே எனக்கு அவமானமாயிருக்கிறது. இங்கேபார் சரஸ்வதியை; எவ்வளவு ஒழுக்கமாகச் சட்டை போட்டிருக்கிறாள். அவளைப் பார்க்க நாகரீகக் குறைவாகவா இருக்கிறது. சாக்ஷாத் சரஸ்வதியைப் போலவே இருக்கிறாளே. இத்தனைபேரிலும் உன்னைப்பார்க்க எனக்குக் கொஞ்சமும் பிடித்துக் கொள்ளவில்லை. உன்னைப்பார்த்த மற்றச்சாதியார் 'சீ! பாழ்ப்பாணத்தவருடைய உடையைப் பாருங்கள் என்று காறியுமிழ மாட்டார்களா? எவ்வளவு மரியாதையாயிருந்து வரும் உன் சகோதரிகளுக்கு கோடாரிக் காம்பு போல மானத்தைக் கெடுக்க வந்தாய் என்று கொஞ்சமும் தாக்ஷண்யமின்றி சொல்லிவிட்டார்கள். (எனக்கோ அவள் கோபித்துக் கொள்ளப் போகிறாளே யென்று பயமெடுத்துவிட்டது.) "அதற்கென்ன செய்வது. இதெல்லாம் அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது. தங்கள் தங்கள் மானம் அவமானம் தங்களுக்குத் தெரியாதா? இங்கே நான் கூடத்தான் பெரிய கழுத்துச் சட்டை போட்டிருக்கிறேன். இது வேர்வைக்கு லேசாய் இருக்கிறது" என்று அவளை சமாதானப் படுத்த இரண்டு சொல்லுச் சொல்லுவதற்குள், சின்னம்மா ஆத்திரத்துடன் "நீதான் அவளையும் கெடுக்கிறாய்! என் நீயும் கொஞ்சம் சிறிதாக உந்தச் சட்டைக்கழுத்தை வெட்டிப்போட்டாலென்னவென்று நானும் எத்தனைதரம் தான் சொல்லிவிட்டேன். வேர்வையாம் வேர்வை! அப்படியானல் உடம்பெல்லாம் வேர்க்கும்தானே! சட்டையே இல்லாமலிருந்தால் வேர்வைக்கு சுகமாயிருக்குமே! எப்படியாவது பாழாய்ப்போங்கள். எனக்கென்ன வந்தது. நான் நாளைக்குப் போகிறவள்" என்று சொல்லி விசையாய் எழுந்து "நான் போகிறேன்; உங்களுடன் எனக்கு கொஞ்சமும் ஒத்துப்போகாது" என்று சொல்லிக்கொண்டு உள்ளுக்குப் போக எத்தனித்தார்கள்.

அப்போ அமிர்தம் "இல்லை சின்னம்மா! நீங்கள் சொல்லுவது சரியே. உட்காருங்கள்; சொல்லத் தொடங்கிவிட்டுப்போவது சரியல்ல; நான் இப்படியே பழகிவிட்டேனே; இனி எப்படி வேறுவிதமாய் போடுவது; அத்துடன் எத்தனையோ சட்டைகள் இப்படியிருக்கிறதே; இனி வேறே தைக்க வீண் செலவு தானே; இவை கிழிந்தபின் வேறு தைக்கும் போது நீங்கள் சொல்வதைப்போல் தைத்துப்போடுவேன்" என்றாள்.

சின்னம்மாவும் சந்தோஷத்துடன், "இல்லை இல்லை! அப்படிச் சொல்லாதே! என்ன செய்ய வேண்டுமென்றாலும் உடனே செய்யவேண்டும். பின்போட்டால், பின் அது செய்ய மனம்வராது. ஏன் உந்தச் சட்டைக்கே ஒரு கையும் வைத்து கழுத்துக்கு ஏதும் றேந்தை அல்லது வேறு துணிவைத்து சுருக்கித் தைத்துவிடலாம். ஏன் வீணாக இவற்றை வைத்துவிட்டு வேறு தைக்கவேண்டும். நான் சொன்ன மாதிரிச்செப்தால் எல்லாம் மிச்சமாகும்" என்றார்கள்.

அமிர்தம், சரி சின்னம்மா நீங்கள் சொல்வது போல் செய்கிறேன். இன்றைக்கே போய் இதிலொன்றை வெட்டிக் கைவைத்து தைத்து நாளைக்கே போட்டுக் கொள்கிறேன் பாருங்கள் என்றாள்.

நானும் அவர்கள் இராசியாய்ப்போனது கண்டு மிகவும் சந்தோஷத்துடன் பார்த்திருந்தேன். என்னைப்போல் பார்த்திருந்த சுசீலா, "இருந்தாலும் சின்னம்மாவின் சமத்து யாருக்குண்டு! நாங்கள் எவ்வளவு நாளாய்ச் சொல்லிப்பார்த்தும் அசையாதவளை, ஒரு நொடியில் திருத்திவிட்டார்களே. இன்னும் கொஞ்சநாள் இங்கிருந்தார்களானல் இந்தப் பக்கத்திலிருக்கும் யாவருமே திருந்திவிடுவார்கள்" என்றாள்.

ஞானமலர்: மெய்தான்! ஆனல் என்ன கேடு இருக்கிறது எங்களை திருத்துவதற்கு?

சின்: திருத்துவதற்கு ஒன்றுமில்லையா? ஆனல் யாழ்ப்பாணவத்தவர் ஐக்கிய சங்கத்தில் சேர்ந்திருக்கிறாயா?

ஞானம்: ஐக்கிய சங்கத்தில் சேர்ந்துவிட்டால் மட்டும் என்ன திருத்தம் வந்துவிடும்?

சின்: என்? நீ பார்க்கவில்லையா, இவர்கள் நாலுபேரும் அதில் சேர்ந்து, அவர்களது சஞ்சிகையாகிய வழிகாட்டிக்கு எழுதி வருவதுடன், வீணாகக் கண்ட துணியென்றும், நகையென்றும் காசு கொட்டாமல் எவ்வளவு சிக்கனமாக நடந்து வருகிறார்கள்? சரஸ்வதி சமையற்காரனைக் கூட விட்டு தானே புனிதமாகச்சமைத்து, வீட்டையும் பார்த்து வருகிறாள். தங்கா காட்டுச்சேலையில் பணத்தைக் கொட்டாமல் தப்பித்துக் கொண்டாள்.

சுசீலா: சின்னம்மா சொல்வது உண்மையே. ஒரு சங்கத்தில் சேர்ந்தால் எல்லோரும் சேர்ந்து, எவ்வளவோ ஒற்றுமையாக யோசித்து, எல்லாவற்றையும் செய்யலாம். நாங்கள் இந்தியப் பெண்கள் சங்கத்தில் சேர்ந்து எவ்வளவு வேலை செய்துவருகிறோம். அது இந்தச் சங்கத்தைப்போல நிதியாயில்லாவிட்டாலும் அங்கத்தவர் யாவரும் கிழமைக்கு கிழமை கூடி எவ்வளவு குதூகலமாகக்காலம் கழிக்கிறோம். நான் சிறு குழந்தை வைத்திருப்பதினால் அடிக்கடி போகமுடியவில்லை. இருந்தாலும்மாசமொரு முறையாவதுபோய் எங்கள்சகோதரிகளைக்கண்டால் எவ்வளவு சந்தோஷமேற்படுகிறது.

நான், எப்படியிருந்தாலும் இந்தச்சங்கத்தில் எழுதிவரும் வியாசங்களைப் பார்த்தபின், எத்தனை சகோதரிகள் திருந்தியிருப்பதாக அறிகிறோம். அன்று இங்கு நடந்த காட்டுச் சேலைச் சம்பாஷணையால் எத்தனையோசகோதரிகள் காட்டுச் சேலை வைத்திருந்தும், உடுக்கவில்லையாம். விலையுயர்ந்த துணிகளை வாங்குவதுமில்லை யென்று தீர்மானித்திருக்கிறார்களாம். "சிறு துளி பெரு வெள்ளம்" என்பதுபோலக் கொஞ்சம் கொஞ்சமாய் குறைத்துக்கொண்டே வந்தாலும் பின் நம்மவர்களுக்கு எவ்வளவு நன்மையுண்டு! சுசீலா இது யாழ்ப்பாணத்தவற்கு மட்டு மென்றெண்ணுமல், தமிழ் பெண்களுக்கு என்று நினைத்து நீங்களும் கவனமாக நடந்தீர்களானால் உங்களுக்குத்தானே நன்மை என்றேன். சுசீலாவும், மாமி! "நான் அன்று தொடக்கம் ஒரு வித்தியாசமாக நடப்பவளல்ல என்று நீங்கள் அறியாததா. நானும் சந்தாதாராகச் சேர்ந்து, வெளிவரும் ஒவ்வொரு பிரதியும் படித்தே வருகிறேன். எனக்கும் அது வாசிக்க மிகவும் பிரியம். எப்போ வருமென்று காத்திருக்கிறேன்" என்றாள்.

இதற்கிடையில் சின்னம்மா, மணியாகிறது. வருஷம் பிறந்து நல்ல நாளாச்சு இன்றைக்கு; ஏதும் தண்ணீர் கொடுத்துவிடவேண்டும் என்று சொல்லிக்கொண்டு உள்ளுக்குச் சென்றுவிட்டார்கள்.

நேரமாச்சுது; வீட்டுக்குப் போகவேண்டுமென்றாள் சரஸ்.

ஏதோ நல்லநாளென்று பெரியவர்கள் சொல்லும்போது அதை தட்டுவது அழகா; பின்வேறேதும் நாட்களில் பாக்கு வெத்திலை கூட கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் குடிக்க முடியாதே என்றாள் தங்கா.

அமிர்தம், "நானும் நகுலேந்திரமுந்தான். அது பார்த்துத்தான் என்ன வந்தது; நான் இவை ஒன்றும் பார்ப்பதே இல்லை. போன வியாழக் கிழமையும் ஒரு சினேகிதி வீட்டிற்குப் போயிருந்தேன். இன்று வியாழக்கிழமை யாச்சே சர்பத் தண்ணீர் கொடுப்பது என்று ஒருவர்க் கொருவர் பேசிக் கொண்டார்கள். அது கேட்ட நான் நீங்கள் யோசிக்காமல் கொண்டு வாருங்கள்; நானல்லவோ குடிக்கிறேன் என்று ஒரே பிடியாய் நின்று வாங்கிக் குடித்து விட்டு வந்தேன். என்ன நடந்தது" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டாள். நான் ஒன்றும் பேச வகையறியாது ஏதோ ஆன்றோர் அறியாமலோ இப்படியான ஒவ்வொரு வழக்கத்தை நடத்தியிருக்கிறார்கள் என்றேன். (இதற்கிடையில் சின்னம்மாவின் உத்தரவின்பேரில் என் மகள் ஆறு வெங்கலப் பாத்திரங்களில் தேநீரும், ஒரு தட்டில் பலகாரமும் கொண்டு வந்து வைத்தாள். சின்னம்மா எங்கே என்றேன். "அவதண்ணீர் கொண்டு போகச் சொல்லி விட்டுப் போய்ப் படுத்துவிட்டா" என்று சொல்லிப் போய்விட்டாள் என் மகள்.

குழந்தை பிள்ளைகள் உடையவர்கள் ஒருவித மான குறுக்கு விசாரணையு மில்லாமல் குழந்தைகளுக்கும் கொஞ்சம் தேநீர் பருக்கி தாங்களும் சாப்பிட்டுவிட்டு "மம்மி எங்களுக்கு நேரமாகிறது; நாங்கள் போய் வருகிறோம்" என்று யாவருக்கும் சொல்லிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் இருவரது வீடும் ஒரே பக்கத்திலுள்ளது. அதாவது நமது பத்துவீடுகளில் கடைசி வீடு ஞானமலருடையது. அதற்கடுத்தது சுசீலாவுடையது.

அவர்கள் சென்றபின் சரஸ் சொன்னாள், "நானும் அமிர்தத்தைப்போல் முதல் முதல் இவற்றை நம்பவில்லைத்தான்; பின் என் அநுபவத்திற்கு கண்ட பிறகே அதற்குப் பயந்து நடக்கிறேன்" என்று. (நானும் இவ்வளவு வயதாகியும் பெரியோர் சொன்னதுபோல் நடந்து வருவதாலல்லாமல், உண்மையான நம்பிக்கையுடனிருக்கவில்லையானதால்) "என்ன நீ அநுபவத்திற்கண்டாயா? அதை விளங்கச் சொல்" என்று ஆவலாகக் கேட்டேன்.

சரஸ்: நான்தான் சொல்லத் தொடங்கினேனே; அதற்குள் அவசரப் படுகிறீர்களே. நாங்கள் முன் இருந்த இடம் நீங்கள் அறிந்ததுதானே; அந்த வீட்டுக்குப் பக்கத்திலும் நம் சாதியினரே குடியிருந்தார்கள். எனது அடுத்த வீட்டிலிருந்த அந்தம்மாளும், நானும் மிகவும் சினேகம். ஒட்டென்றால ஒட்டிவிடுமென்பார்களே. அப்படித்தான் நாங்களும். மிகவும் அன்னியோன்யமாக நடந்து வந்தோம். அவள் யோசனை யில்லாமல் நான் நடப்பதுமில்லை. என் யோசனையில்லாமல் அவள் ஒன்றும் வாங்குவதுமில்லை. இப்படியிருக்கும்பாது அவர்

களுக்கு வேலை மாறிப்போக சந்தர்ப்பமேற்பட்டது. அப்போ வேறு நாட்கள் வசதியில்லாததினால் வியாழக்கிழமையிலேயே ஒரு விருந்து அவர்களுக்கு எங்கள் வீட்டில் ஏற்பாடு செய்தோம். அவர்களும் சம்மதித்துச் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டார்கள். மூன்றுநாள் அவர்களும் மிகவும் கஷ்டத்துடன் எங்களை விட்டுப்பிரிய மனமில்லாமலே பிரிந்து சென்றுவிட்டார்கள். நாங்களும் அவர்கள் பிரிவாற்றாது மிகவும் துக்கப்பட்டோம். ஆனால் அவர்கள் போயிருக்குமிடம் அவ்வளவு தூரமல்ல; பத்துமைல்தான் வித்தியாசமானதினால் நாங்களும் அடிக்கடி போய் வருவோம். அவர்களும் வந்து இரண்டொரு நாள் நின்று போவார்கள். அப்படி ஒருநாள் அவர்கள் வந்திருக்கும்போது, சிறுபிள்ளைகளுக்கிடையில் ஏதோ வாக்குவாதம் வந்துவிட்டது. ஒரு நாளுமில்லாமல் என் அன்பார்ந்த சினேகிதியும் அதைப் பெரிதாய் எடுத்துத் தன் பத்தாவிடம் சொல்லிவிட்டாள் போலிருக்கிறது. அவருக்கு வந்துவிட்டது ஆத்திரம். அவரும் "இந்த அற்பன்களை ஒரு சரக்கென்று மதித்து வந்ததால்லவா இப்படியெல்லாம் அவமானப் படநேர்ந்துவிட்டது," என்றிரைந்தார்.

ஒன்றும் விளங்காமல் உள்ளுக்கிருந்த நான், ஏன்ன அது! என்ன நேர்ந்தது! என்று சொல்லிக் கொண்டே வெளியில் வந்தேன். என்ன நேர்ந்ததா? என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார். என்ன புனிதம்! என்ன அப்படி நடந்தது! என்று சாந்தமாக என் சினேகிதியை வினவினேன். அதற்கு அவள், "அப்படி ஒன்றும் நடக்கவில்லை. என் மகள் ஒரு விளையாட்டுச் சாமானை உன் குழந்தைக்குக் கொடுத்தது. அதை அவள் வேண்டாமென்றால், வேண்டாமென்று சொல்லியிருக்கக் கூடாதா? "அதெல்லாம் நீ செய்வது ஏன் என்று எனக்குத் தெரியும். என் மானத்தைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்றுதானே! அதுசரிப்படுமா?" என்றாளாம். அதை என் மகள் என்னிடம் முறையிட்டாள். இதுகேட்டிருந்த தகப்பனுக்கு ஆத்திரம் மூண்டுவிட்டது. ஏதோ பெற்றோர் பேசியிருப்பதைத் தானே இது கேட்டுவிட்டு இப்படிச் சொல்லுகிறது என்று ஆத்திரத்துடன் 'இப்பவே எல்லாம் கட்டு; வெளிக்கிடவேண்டும்' என்று சொல்லிவிட்டார்" என்றாள்.

நான் என் பிள்ளையையும் கூப்பிட்டுத் தண்டித்துவிட்டு என்னால் கூடியவரையில் அவளைச் சமாதானப்படுத்த முயன்றேன் அதற்கு அவள் "அவர் சொல்லிவிட்டுப் போனபின் நான் என்ன செய்யலாம்" என்றுவிட்டாள். சிறிது நேரத்தால் வெளியில் போயிருந்த அவள் புருஷனும் வந்தார். சாப்பிடாமலே யாவரும் சென்றுவிட்டார்கள். அன்றுமுதல் நானும் அவளும் நேரில் சம்பாஷிக்காவிட்டாலும் என் மனம் மட்டும் அவளின் சுகசேமத்தை அறிய ஆவலாக இருக்கிறது. என் பத்தா மட்டும், 'இது யார் பேரிலும குற்றமில்லை. அந்த வியாழனின் கூற்று. வியாழக் கிழமை கூடாது. சினேகமாயிருப்பவர்களை வியாழனில் விருந்து போட்டுக் கெடுக்கப் போகிறாய் என்று சொன்னேன் கேட்டாயா? எங்களுக்குள்ளும் அப்படியேதும் வருமா என்றாயே! இப்போ எப்படி,' என்றார். அப்போர் என் மனமும் கொஞ்சம் அடித்துக் கொண்டது. புனிதத்தின் புருஷன் வழமையில் சற்று மூற்கோபிதான். ஆனால் அவள் சொன்னதை கேட்டிருப்பார். அவளையும் சிறு பிள்ளைகளின் கதைக்குக் கோபிக்கப் பண்ணினது அந்த வியாழனைத்தானிருக்கவேண்டும். இப்போ நான் அதெல்லாம் பார்த்துத்தான் நடக்கிறேன்.

அமிர்: அப்படியானால் உனக்கு ஒரு தம்பி உண்டோ? அவனுக்கு ஏன் உன் சினேகிதியின் மகளைச் செய்யக் கூடாது.

சரஸ்: என்ன ஆயிரம் சினேகமாயிருந்தாலும் நம் சாதியை விட்டு நாம் விலகலாமா? அப்படி நான்தான் செய்ய இசைந்தாலும் என் பெற்றோர் சம்மதிப்பார்களா? ஊரில் நம உற்றார் உறவினர்தான் என்ன சொல்லுவார்கள்.

அமிர்: நாள் ஒன்று பார்த்தீர்கள். இனிச் சாதி வேறு பார்க்கிறீர்கள். இன்னும் என்னதான் பார்ப்பீர்களோ?

சரஸ்: என்ன செய்வது? ஊருக்குத் திரும்பிப் போக இருப்பவர்களானதினால் இதெல்லாம பார்க்க வேண்டியிருக்கு. இல்லாமல் இங்கேயே தங்கிவிட்டால் ஒன்றுமே பார்க்கத் தேவையில்லை. நீ குழந்தைகளில்லாததினால் இப்படி யெல்லாம் வேதாந்தம் பேசுகிறாய். இரண்டுக்கு மேலே குழந்தைகளிருந்தால். அறிவாய் "ஊருடன் ஒத்து வாழ்" என்பது போல் நாலுபேர் நடப்பது போல் நாமும் நடக்கிறோம். மற்றவர்களும் இப்படியான வழக்கங்களை விட்டுவிட்டால் நாமும் விட்டுவிடத் தடையில்லை.

அதெல்லாம் சரிதான்; அதை ஒருவர் துவக்கி நடந்தால்லவோ மற்றவர்களும் பின்பற்றுவார்கள் என்றாள் அமிர்தம்.

இதெல்லாம் கேட்டுவிட்டு சரஸ் சொன்னாள், 'ஒருவர் துவங்கினவுடன், அவன் பைத்தியக்காரனென்றல்லவோ உலகத்தார் சொல்லுகிறார்கள். ஒருசமூகம் அல்லது ஒரு கூட்டத்தார் ஒருமித்துத் தொடங்கினால் ஒருவேளை வெற்றிபெறலாம். ஆனால் இதெல்லாம் அடுப்பங்கரைப் பிரசங்கம்

ஆண் சிங்கங்களல்லவா ஒத்துக்கொள்ள வேண்டும்.

"ஒத்துழைப்பு" என்பது நம்மவருள் இருந்தால் எல்லாம் முன்னேறி வரத் தடையில்லை" என்றாள் தங்கா.

இப்போ நாங்கள் நால்வரும் எங்கள் பத்தாமாரும் ஒத்து, அந்த ஐக்கிய நாணய சங்கத்தில் சேரவில்லையோ? "எத்தால் வாழலாம் ஒத்தால்" என்பதுபோல் இப்படியே ஒவ்வொரு சிறு கூட்டங்களிலும் ஒற்றுமைபாய் நடந்தால் பின் பெருங் கூட்டங்களிலும் ஒற்றுமையாயிருக்கப் பழகிக் கொள்வோம் என்றேன் நான்.

இப்படியே நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் வாயில் வந்ததெல்லாம் பெண்கள் சுபாவப்படி பிதற்றிக்கொண்டே யிருந்தோம். பூம்! பூம்! என்று கத்திக் கொண்டே ஒரு மோட்டார் வண்டி வந்து எங்கள் வீட்டுக்கு முன்னால் நின்றது. அதினின்றும் அழகே உருவெடுத்தாற்போன்ற நாகரீக நங்கை ஒருத்தி இறங்கினாள். அவளின் அழகையும் நாகரீக உடை நடைகளையும் வர்ணிக்க என்னாலியலாது. ஒன்று மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். அதாவது எல்லாம் மேகவர்ணமயமாகவே இருந்தது. சேலையும் அதற்கேற்றசட்டையும் அதேநிறச் சப்பாத்தும், கைப்பையும் இன்னும் கொண்டையில் அதே நிறப்பூவும் எல்லாம் ஒன்றுக்கொன்று அவளின் ரோஜா வர்ணமான நிறத்திற்கு ஒத்திருந்தது. வா, இரு என்று கூடச் சொல்லாமல் அவளின் வனப்பில் மயங்கினவர்களாய் ஸ்தம்பித்து நின்றுவிட்டோம். அவள் மோட்டாரால் இறங்கி டக் டக் என்ற சப்தத்துடன் படிகளிலேறி மேலுக்கு வந்த பின்தான் நான், வா! ரஞ்சிதம்; இப்படி உட்கார்! கண்டு கனகாலமாச்சே! குழந்தைகள் சவுக்கியம்தானே! அக்கா சுகந்தானா என்று அடுக்கடுக்காய்க் கேட்டேன்.

"ஓம்மாமி எல்லாரும் சவுக்கியம்தான். நீங்கள் மட்டும் அந்தப் பக்கம் வர மாட்டீர்கள்; நான்தான் நெடுக வரவேண்டியிருக்கு. உங்களுக்குத்தான் இவர்கள் நாள் முழுதும் இருப்பார்கள்; மற்றவர்கள் என்னத்திற்கு" என்றாள் ரஞ்சிதம்.

"என்ன அப்படிக் கோபித்துக் கொள்கிறாய். உனக்குத்தான் காடி உண்டு; நினைத்த நேரம் வெளிக்கிடலாம். நாங்கள் எங்கள் பத்தாமாரின் லீவான நேரம் பார்த்து வெளிக்கிட வேண்டும். அத்துடன் இப்போ வருஷம் பிறந்து கொஞ்ச நாள்தானே. யாரும் வருவார்கள் என்றுதான் வெளிக்கிடவில்லை. இனி வெளிக்கிடாமலென்ன" என்றேன். இதற்கிடையில் அமிர்தம் வந்து: "ஏன் ரஞ்சிதம், எங்கள் வீட்டுக்குவரவில்லையோ! எனக்கும் நேரமாகிறது; நான் போக வேண்டும்" என்றாள். (மற்றவர்களுக்கு இவளைப் பழக்கமில்லாததினால் மெல்ல என்னிடம் சொல்லிக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டார்கள்.)

உன்வீட்டுக்கும் வருவேனென்றுதான் எண்ணியிருக்கிறாயோ? நீ அன்றைக்கு வரும்போது எனக்கு ஒன்றும் தெரியாது. சனிக்கிழமைதான் அக்கா வீட்டுக்கு வந்திருந்தா. எப்படி எப்படியெல்லாம் வழிகாட்டியில் எழுதியிருக்கென்று சொன்னாய்; எல்லாம் உன் வேலையாகத்தானிருக்கும். வாயால் தான் சொன்னால் போதாதா? இனி எழுத்திலும் எழுதத்துவங்கி விட்டாயா? என்றாள் ரஞ்சிதம். இது கேட்ட நான், என்ன அப்படி நடந்தது; அமிர்தம் என்னஎழுதினாள் என்றேன். இதற்கிடையில் அமிர்தம் "ஓம் நான்தான் எழுதினேன்; அதற்கென்ன இப்போ" என்றாள். "அதற்கென்னவா? "என்னுடைய அக்காவும், தன் புருஷன் சம்பாத்தியம் போதாதென்றே, அல்லது சும்மா இருந்து பொழுது போகவில்லையென்றோ அந்தத்தாதித் தொழிலை நடத்திவருகிறாள். உன் எழுத்தைப்பார்த்தபின், பார்த்தாயா அந்தப்பெண் எழுதுவதை; இல்லறத்தார்க்கு வீட்டுவேலையும் மனைவியின் கடமையுமே சரியாயிருக்கும். நீ இதெல்லாம் விட்டுவிட்டு வீட்டிலேயே இரு என்று தொந்தரவு செய்கிறாராம் அவள் புருஷன். இதெல்லாம் உன்னால்தான் வந்தது" என்று, கோபித்துக்கொண்டாள் ரஞ்சிதம்.

அமிர்தம்: உண்மையில் வாசித்ததையே எழுதினேன். ஏன் நீயும் முன் படித்தவள்தானே; பின் சடங்கு செய்தபின் படிக்க முடியாதென்று தானே விட்டுவிட்டாய். அத்துடன் "சடங்குக்குமுன் காலமே எழும்பி உன் சொந்த அலுவல்பார்த்தக்கொண்டு வெளிக்கிட்டு விடலாம். இது கலியாணங்கட்டினபின், புருஷனின் அலுவல் பார்த்து, வீட்டுக்குச் சமையலுக்கு ஆகவேண்டியது எல்லாம் சொல்லி வெளிக்கிட வேணும். இனி வீட்டுக்கு வந்து பார்த்தால் உப்புமில்லை புளியுமில்லையென்று ஆக்கிவைத்திருப்பான் சமையற்காறன். புருஷனென்றால் ஒரு தொந்தரவுமில்லாமல் வெளிக்கிட முடியும்; இது என்னதான் வெளியில் வேலைசெய்தாலும், வீட்டையும் பார்க்க வேண்டியது பெண்கள் கட்மைதானே. எல்லாம் ஒன்றுபப்பார்க்க என்னலாகாது, என்று விட்டுவிட்டேன்" என்று நீதானே சொல்லியிருக்கிறாய். பின் நான் எழுதினதைப் பற்றிக் குறை கூறுகிறாயே.

'ஓ! அதைப்பற்றியாபேசிக்கொண்டீர்கள். அதில் ஒன்றும், அவ்வளவு வித்தியாசமாக இல்லையே. பெண்களுக்கு வீட்டுவேலையுடனேயே பொழுது சரியாயிருக்கும். அப்படி நேரம் மிச்சமாயிருந்

தால் அதையும் லீணைக்காமல் இப்படியான பிரயோசனமான விஷயத்தில் பொழுதைக் கழிப்பது இன்னும் நல்லதுதானே," என்று நான் ஒருவகையாய் அவர்களைச் சமாதானப் படுத்தினேன்.

இர: நம் சகோதரிகள் இப்படியெல்லாம்முன்னேற்றமடைந்து வருகிறார்களென்று பெருமையாகச் சொல்லாமல், அதுகுறைவென்றும், இல்லறமே மேன்மையுடையதென்றும், இவள் இப்படியெல்லாம் எழுதலாமா என்றும் மிக்க கோபத்துடனேயே சொல்லிக்கொண்டிருந்தாள்.

இதற்கிடையில் என் மகளும் ஒரு தட்டத்தில் பலகாரமும், ஒரு கிண்ணத்தில் தேநீரும் கொண்டுவந்தாள். அதை வாங்கிக் குடித்துவிட்டு "நேரமாகிறது மாமி! அவருக்குக் காடி அனுப்பவேண்டும் என்று சொல்லிக்கொண்டு எழுந்து போய்விட்டாள் இரஞ்சிதம்.

அவள் சென்றபின் நானும் அமிர்தமும் வயிறு நோகச்சிரித்தோம். சிரிப்பு ஓய்ந்ததும், அமிர்தம், ஆர் எழுதினது என்று அறிந்துகொண்டுதான் பரிந்து பேசினீரோ என்று அறிய ஆவலுற்றவளாய், 'என்ன அமிர்தம் அது உண்மையில்நீதான் எழுதினதோ?' என்றேன்.

இல்லை! ஆர் எழுதினால்தானென்ன! அவளும் எங்களைப்போல் ஒரு பெண்தானே! அவள் சொல்லும் நியாயத்தை நானே சொல்லிவிட்டேன். அதில் பெண்கள் வேலை செய்வதைப்பற்றி ஏதும் இழிவாக எழுதப்பட்டிருக்கிறதா? இல்லறமே பெண்களுக்கு ஏற்றது; அதைச்செவ்வையாக நடத்தும் முறையே முன்னேற்றம் என்று எழுதப் பட்டிருக்கிறது. வேறென்ன! இதிலென்ன தப்பு; இதற்காக அவளேன் அப்படிக் கோபித்துக்கொள்ளவேண்டும். அழகுதான் அழகு! அறிவோ, யோசனையோ, குணமோ ஒரு மண்ணுமற்ற அழகு என்றாள் அமிர்தம்.

நான்: கனக்க அறிந்திருக்கிறாயே! ஆங்கிலம் படித்தாலும் உன்னைப்போலல்லவோ படித்திருக்கவேண்டும். அவளைப்போன்றவர் அவற்றை வாசித்து அதன் கருத்தைச் சரிவர அறிந்து கொள்ள அறிவு போதாமையால் பன்னுடையைப் போல் கஞ்சலை மட்டும் எடுத்துக்கொண்டு நல்லதைக் கீழே விட்டுவிடுகிறார்கள். நன்மையான வழிகளைத் தொடங்குகிறவர்களையும் தங்கள் அழுக்காறு நிறைந்த மனதினால் அப்படியே அழுக்கிவிட யோசிக்கிறார்கள்: அன்னமானது நீரையும் பாலையும் கலந்து வைத்தாலும், பாலைமட்டும் எடுத்துக் கொண்டு நீரை விலக்கிவிடுமாம்; அதல்லவோ அறிஞர்க்கழகு. அது அபபடியிருக்க, நீ வந்த போது எனக்கு தெரியாது என்றாளே; நீ எப்போ போயிருந்தாய்.

அமிர்: அன்றுதான் அந்த வியாழக்கிழமை தான். அதன் பலன் போலும் இது. (என்று சொல்லிச் சிரித்தாள்.)

நான்: அப்படியா! அங்கே தானே போய் வில்லங்கமாய்த் தண்ணீர் குடித்துவிட்டதாகப் பெருமை பேசினாய். பலன் கைமேல் கிடைத்துவிட்டது பார்த்தாயா? இதை ஒரு பிரமாதமாக எண்ணிக் கொண்டுதானே அவள் உன் வீட்டிற்கு வராமலும்; உனக்குச் சொல்லிக் கொள்ளாமலும் கூடப் போய்விட்டாள். அவளின் அற்ப புத்தியைவிட யாரோ எழுதினதை நீ எழுதினதாகச் சொல்லி வலுவில் அவளுடன் சண்டை செய்த உன் தற்பெருமை எவ்வளவு மேலானது. இதுவும் யார்பேரிலும் குற்றமில்லை. சரவின் புருஷன் சொன்னதுபோல் அந்த வியாழனின் கோளாறுதான்.

அமிர்தம்: என்ன மாமி நீங்கள் கூட அதை ஒத்துக்கொண்டீர்களே; ஏதோ காகம் இருக்கப் பனம் பழம் விழுந்ததுபோல் இதுவும் கொஞ்சம் பொருந்திப்போய்விட்டது. அவ்வளவுதான்.

நான்: இருந்தாலும் பெரியவர்கள் உண்டாக்கியிருப்பது ஒவ்வொன்றும் ஒவ்வொரு நியாயத்துடன் தானிருக்கும். அதை நாம் அசட்டை பண்ணலாமா?

அமிர்தம், அப்படியானால் பெரியவரிடம் இதைப்பற்றி விசாரித்துப் பார்ப்போம். இப்போ நேரமாகிறது; போய்வருகிறேன் என்று சொல்லிப்போய்விட்டாள்.

அவள் சென்ற பின் சின்னம்மா எழும்பி வந்தார்கள். என்ன சின்னம்மா வியாழனைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும் என்றேன். என்ன வியாழக்கிழமையா? "கள்ள வியாழன் கழுத்தை அறுக்கும்" என்று சொல்லிக்கொண்டே முகங் கழுவக் குளிக்கும்மைக்குள் இறங்கிவிட்டார்கள். நாலரை மணி அடித்தது. என் நாதரும் வந்து சேர்ந்தார். சிற்றுண்டிசாப்பிட்டு முடிந்ததும் எங்கள் சம்பாஷணை யெல்லாம் அவருக்குச் சொன்னேன்.

அவர், அதில் ஏதும் உண்மையிருக்கத்தான் வேண்டும். நாம் மட்டுமா; எல்லாச்சாதியாரும். இப்படித்தான் ஒவ்வொரு பழக்கத்தைக் கைக் கொண்டு வருகின்றனர். ஆங்கிலேயர் ஒரு நெருப்புக்குச்சியால் மூவர் சுருட்டுப் பற்றவைக்கமாட்டார்களாம். பதின்மூன்றாவது எண் அதிர்ஷ்டஈனமான எண்ணைக் கருதப் பட்டு வந்ததாம். நீயும் இவற்றை வழிகாட்டிக்கு எழுதி அனுப்பு நம்மிலும் அனுபவம் கூடியவர்கள், பார்த்தால் ஏதும் எழுதுவார்கள் என்றார். ஆகலால் நானும் எழுதிவிட்டேன்.

—தேவி.

* எனது அறியாமை *

[முற்றுடர்]

சிநேகிதி: ஏதம்மா! தையல் நேரம் போலி ருக்கிறதே.

நான்: ஓமோம், வாருங்கள், வாருங்கள்! உட் காருங்கள். அன்று உங்கள் வீட்டிற்கு வந் தேன். நீங்கள் வெளியில் போய்விட்டதாகப் பிள்ளைகள் சொன்னார்கள்.

சி: ஆமாம் நீங்கள் வந்ததாச் சொன்னார் கள். அன்று ஒரு சிநேகிதியின் வீட்டில் விசே ஷம்; அதற்காகப் போயிருந்தேன். ஏதோ தைத் துக்கொண்டிருந்தாயே! அவசரமான தையலோ?

நான்: அப்படி அவசரமானதல்ல; கிழிந்த சட்டைகளைத் தைத்துக் கொண்டிருந்தேன். இவ்வளவு காலமும் கிழிந்த துணி தைப்பதற்குக் கூட நேரமில்லாமல் போட்டு வைத்திருந்தேன். இப்போதான் அதற்கு நேரம் கிடைத்தது.

சி: என்ன அம்மா! நீ சொல்வதைக் கேட்க ஆச்சரியமா யிருக்கிறதே! அன்று பத்திரிகை வாசிக்க நேரமில்லையென்று சொன்னாய். இன்று ஓய்வாக இருக்கிறதாகச் சொல்லுகிறாய் என்ன சங்கதி?

நான்: அன்று நீங்கள் சென்ற பின்னால், நீங் கள் சொன்னவற்றை யோசித்து உண்மையை உணர்ந்தேன். "மாமியின் புத்திமதி"யையும் வாசித்து எனது மடமைக்காக வருந்தினேன். இனியாவது திருத்தி நடப்பதென்று தீர்மானித் தேன். நடந்தவற்றை அப்படியே, எனது கண வரிடம் சொல்லி எனது எண்ணத்தையும் சொன் னேன்.

அதற்கு அவர் "உனது சினேகிதி சொன்னது போல், நானும் சிலவேளைகளில் நினைப்பதுண்டு. இ ருந்தும் பிள்ளைகளின் தொந்தரவையும், உனது தேகநிலைமையையும், எண்ணிச் சொல்லாமலிருந் தேன்" என்றார். கொஞ்ச நாட்களுக்குச் சமை யலாலே நிற்பாட்டிவிட்டு செய்து பார்க்கிறேன்; முடியாவிட்டால் பிறகு பார்த்துக்கொள்ளலாம். வேலைக்காரர்தான் கிடையாதா? என்று சமாதா னம் சொன்னேன். அதற்கென்ன உன் விருப் பப் படியே செய். பிறகு வருத்தமென்று என்னி டம் சொல்லவேண்டாம்" என்று சொல்லிவிட் டார். இப்போ சமையலாலே நிற்பாட்டிவிட் டேன். முனியம்மாதானிருக்கிறாள்.

பாத்திரம் தேய்ப்பாள்; ஏவிய வேலைகளைச் செ யவாள். மணி ஐந்தரைக்கு எழும்பிவிடுவேன். நானே செய்வதால் எல்லாம் மணிப்பிரகாரம் முடிந்துவிடும். அத்துடன் வீண்பொழுது போக் கையும் விட்டு விட்டேன். ஆதலால் மனதுக்கு ஆறுதலும் போதிய நேரமுமிருக்கிறது.

சி: ஆமாம், "தன்கைதான் தனக்குப் பெ லன்" என்று பெரியோர் சொல்வதுண்டு. அத ன்படி வீட்டுக் கருமங்களை தானே பார்த்து வந் தால் எல்லாம் ஒழுங்காக இருக்கும்; நேரம் எவ்வ ளவு வீணேயேறப் பெற்றதென்பது இப்போ தெரி கிறதா? இவ்வளவு சீக்கிரத்தில் புதிய வழியில் நடக்கக் கற்றுக்கொண்டாயே! மிக்க சந்தோஷம்; பெண்கள் நினைத்தால் ஆகாத காரியமொன்று மில்லை. அதனால்தான் "ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்" என்று சொல்லியிருக்கி றார்கள். உனது சிநேகிதிகளின் பொழுது எப்ப டிப்போகிறது?

நான்: அவர்களும் வீட்டுக்காரியங்களில் கவ னம் செலுத்தி வருகிறார்கள். ஓய்வான நேரங்க ளில் அறிவைப் பெருக்கக் கூடிய புஸ்தகங்கள், பத்திரிகைகள் வாசித்துவருகிறோம்.

சி: உனக்குத்தான் வாசிப்புப் பிடிக்காதே? இப்போ எப்படி வாசித்து வருகிறாய்?

நான்: அதையேன் கேட்கிறீர்கள்; முதல் ஒரு வாரமாக மேப்பங்காயாகத்தானிருந்தது. தெண் டித்துச் சிறுக சிறுக வாசித்து வந்தேன். இப் போ வாசிக்க உற்சாகமாக இருக்கிறது. இது வரையில் வீண்காலம் போக்கியதை எண்ணி வரு ந்துகிறேன்.

சி: சென்ற காலத்தை எண்ணி வருந்து வதில் என்ன லாபம்? போனதை நினை யாமல் திருந்தி நடப்பதே புத்தி. அதிருக்க நீ சொன்னதுபோல் படிப்பில் மட்டும் ருசி பிறந் துவிட்டால், பிறகு காலமுழுதும் படிப்பதிலேயே புத்தி சென்றுவிடும். மனதை உருக்கும் காவி யங்கள், உணர்ச்சிபொங்கும் கட்டுரைகள் வாசி க்க எடுத்தால் அது முடியுமுன் பசியாவது, தாக மாவது தோற்றாது.

நான்: நீங்கள் சொல்வது உண்மையே. ஆனா ல் படிப்பதில் என்ன சுகமிருக்கிறது? வாசித் துக் கொண்டிருந்தால் வீட்டில் உள்ள வேலை களை ஆர் செய்வார்கள்? ஏதோ அந்தக்காலம் படித்தோம்; இப்போ அப்படிப்படிக்க முடியுமா? படித்தென்ன உத்தியோகம் பார்க்கப்போகிறோ மா? நம் பாட்டிமார் படித்துத்தான் குடித்தனம் செய்தார்களா?

சி: உத்தியோகம் பார்க்கத்தான் படிப்பதா? மற்றவர்கள் படிக்கக்கூடாதா? கற்பதற்கும் கால வெல்லையுண்டா? கல்வியே எல்லாவற்றிலும் மே

லான செல்வம். கல்விப் பொருளே வெள்ளத்தா லும், நெருப்பாலும், கள்வராலும் அழிக்கமுடி யாத பொருள்; இறைக்க இறைக்க ஊறும் மணற் கேணிபோல், கொடுக்கக் கொடுக்க குறைவுபடா து. அப்படியான அருங்கலவியை கற்பதால் நஷ்டமென்ன? கல்வி ஒரு வகுப்புக்கு, ஒரு சா திக்கென்று, நிபமித்தாயிருக்கிறது? "நாற்பாற் குலத்தினு மேற்பா லொருவன் கற்றிலனயிற் கீழிருப்பவவே"—என்னும் பெரியோர் வாக்கை சிறு பிராயத்தில் படிக்கவில்லையா? எங்கள் மூதா ட்டி ஔவைப் பிராட்டியார் பெண்மணி தானே? ஆதிகாலந் தொடக்கம் பெண்களையே முதன்மை யாக வைத்துப்போற்றி வந்தார்கள்; போற்றி வருகிறார்கள். பாரதமாதா, பூமிதேவி, இலங்கா தேவி, என்னும் பலநாமங்களே அதற்குச் சா ன்று. இடைக்காலத்தில் தான் பெண்களின் சிற பை மறந்து அடிமைகளாக எண்ணப்பட்டார் கள். (அவ்வெண்ணத்தை நீக்கவும், பெண்களை உயர் பதவிக்கு கொண்டு வரவும் எவ்வளவோ தேசாபிமானிகள் முன் வந்திருக்கிறார்கள்.) அவ் வெண்ணம் நமது பெண்மக்களின் மனதிலேயோ வன்றி, அவர்களை முன்னேறவிடாது தடை செ ய்து விட்டது. அதன் கிளைகளை நீ கேட்டகேள் வீகள்.

இப்போ நமது தாய்நாட்டில் எத்தனையோ பெண்மணிகள் சபைகளிலும், சங்கங்களிலும், இன் னும் பல துறைகளிலும் பங்கு பற்றி தொண்டா ற்றி வருகிறார்களே; அவர்களைப்பற்றி நீ கேள் விப்பட்டதில்லையா? ஒரு தேசத்தின் அபிவி ருத்தி அவர்களுடைய கல்வியையும், ஞானத்தை யும், உத்தம குணங்களையும் பொறுத்திருக்கிறது. அப்பெண்களின் அபிவிருத்தி அவர்களுடைய கல்வியையும், ஞானத்தையும், உத்தம குணங்க ளையும் பொறுத்திருக்கிறது. "இல்லாள் அக தேயிருக்க இல்லாத தொன்றில்லை" என்னும் பெரி யோர் வாக்கியத்திற்கு இலக்காக பெண்கள் வரத் தெண்டிக்கவேண்டும். ஆவதென்ன, என்பதல் லவா! உனக்கு சந்தேகம்?

கல்வி இருபாலருக்கு மூரியதே. குடிமி அழ குஞ், ஆடையின் அழகும், மஞ்சட் பூச்சழகும் அழகல்ல, கல்வியால் உண்டாகும் அழகே அழகு என்று பெண்களையே பிரதானமாகக் குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். அறிவைப் பெருக்கக் கூடிய நூல்களைப் படித்தால் மனமடங்கும், மன மடங்கினால் அகங்காரம், பொறாமை, வஞ்சகம் முதலிய தீக்குணங்கள் அற்றுப்போம். விஷயங் களைப் பகுத்தறியும், தன்னை சீவகாருண்ணியம், ஒற்றுமை முதலிய குணங்கள் உண்டாகும். கல்வி யே அறியாமை என்னும் நோயைத்தீர்க்கும் மரு ந்து. அறியாமை என்னும் இருள் நீங்கினால் தான் அறிவுச்சுடர் பிரகாசிக்கும். கல்வியால் இன்மைக்கும் மறுமைக்கும் பயன் உண்டு. "அரி தரிது மானிடராதலரிது. மானிடராயினுங் கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தலரிது, பேடு நீங்கிப் பிறந்தகாலையும் ஞானமுங் கல்வியும் நயத் தலரிது,"—என்ற பெரியோர் வாக்கியத்தின்படி நமது பிறவியின் பயனை அடையத்தெண்டிக்க வேண்டும். உண்டு உறங்குவதில் எங்கள் காலத் தைக் கடத்தாமல் பொது நலனுக்காக உழைக்க வேண்டும். பள்ளிக்கூடப் படிப்பு முடிந்தவு டன், ஏட்டைக்கட்டி மூலையில் போடாமல் வீட் டிலும் தொடர்ந்து வாசித்துவந்தால் எவ்வளவோ தேர்ச்சியுண்டாகும், "கற்றது கைமண்ணளவு கல்லாதுலகளவு" என்று கலைமடந்தை ஓதுகிறா ள். ஆனதால் நாம்படித்துவிட்டோம் என்று எண் ணிகற்பதை ஒருபோதும் விடப்படாது. வீட்டு வேலைகளைக் கவனிக்காமல் வாசிக்கும்படி சொல்ல வில்லை. ஏதோ நமக்குக் கிடைக்கும் ஓய்வு நே ரங்களில்வாசித்து வந்தால் போதுமானது.

நமது பாட்டிமார்களைப்பற்றிக் கேட்டாயே? அவர்களிடமிருந்த ஆன்மஞானம், வைராக்கியம், கடவுள் பக்தி, பதிபக்தி, ஞாபகசக்தி, புராண இதிகாசங்களின் தேர்ச்சி முதலிய அரிய குணங் களை, இக்காலத்தில் படித்துப் பட்டம் பெற்ற பெண்களிடம் காண்பதரிது. அவர்களிடமிரு ந்த அரிய குணங்களுக்குக் காரணம் கேள்வி ஞானமே. அக்காலத்தில் ஒவ்வொரு ஆலயங்களி லும், பஜனை மடங்களிலும், வைதீகமான இல்லங் களிலும் காலந் தோறும் புராண பாராயணங்க ளும், கதாகாலட்சேபங்களும் நடந்துவரும். (தற் காலத்தில் சில ஆலயங்களிலும் அவ்விதத் தொ ண்டு நடந்து வருவது போற்றத்தக்கதே. அதன் பயனை அக்கால மக்கள் நற்குண நற்செய்கைகளில் சிறந்து விளங்கினார்கள். அக்காலப் பாட்டிமார் ராமாயணம், பாரதம் கந்தபுராணம் முதலிய புராணங்களையும் அடியார்களின் கதைகளையும் மனப்பாடமாகச் சொல்வதை இன்றும் காண லாம்

அத்துடன் அவர்கள் தம் முதியோர் அனுச ரித்து வந்த பழக்கவழக்கங்களைப் பின் பற்றி நடந்து வந்தமையால் திடகாத்திரர்களாகவும் இ ருந்தார்கள். நாமோ இரண்டும் கெட்டவர்களாக இருக்கிறோம். கல்வி கேள்வியால் உண்டாகும் பயனையும். அப்படிக் கற்றறிந்த பண்டையப் பெ ண்மணிகளின் சிறப்பையும் சொல்வதாகில் எங் கள் சீவிய காலம் போதாது.

சங்க காலத்துப் பெண்மணிகள் புருஷர்களுக் குச்சமமாகவே, கல்வி கற்று வந்திருக்கிறார்கள். வாதில் வென்றும், கவிகளை இயற்றியும், வான சாஸ்திரம், சங்கீதம், சித்திரம், வில்வித்தை,

சாரத்தியம், முதலிய பல வித்தைகளிலும் தேர்ச்சிபெற்று நிகரில்லாத இரத்தினங்களாக இருந்தார்கள். இடைக்காலத்தில் தான் பெண்களின் கல்விக்கு முட்டுக்கட்டை போடப்பெற்றது. "போனதை நினைப்பவள் புத்தி கெட்டவள்" ஆதலால் இனி நடப்பதைப் பற்றி யோசிப்போம்.

நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற் குணங்களையும், விருந்தோம்பல் அடக்கம், பொறுமை, பணிவு, கடவுள் பக்தி, முதலிய இல்லறத்திற்குரிய தர்மங்களைப் போதிக்கத்தக்க புஸ்தகங்களை வீட்டில் பிள்ளைகளுக்குப் படிப்பித்து வரவேண்டும். அத்துடன் பெண்பிள்ளைகளுக்கு வீட்டு வேலைகளையும் பழக்கவேண்டும். இவ்விதம் நடந்து வருவோமாகில் நமது பிள்ளைகளாவது தங்கள் காலத்தில் சிறப்புடன் வாழ்வார்கள். மன்ம் போன போக்கில் பேசிக்கொண்டேயிருந்து விட்டேன்; மணியும் நாலாகிவிட்டது.

நான்: அம்மா, நீங்கள் சொல்லிவந்த அறிவுரைகளால் எனது அறியாமை இருள் நீங்கிவிட்டது. நீங்கள் சொல்லியபடி நானும் பிள்ளைகளும் தாய்ப்பாஷையில் தேர்ச்சி அடையத் தெண்டிப்போம். அத்துடன் இதையே ஒரு வியாசமாக, எனக்குத் தெரிந்த அளவில் எழுதலாமென்று எண்ணுகிறேன். ஆனால் பிழையறக்கடிதம் எழுதத் தெரியாத நான், கற்றறிந்த சகோதரிகள் அலங்கரித்துவரும் சஞ்சிகைக்கு எழுதத் துணிவது "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி" யின் தன்மையாக முடியும். இருந்தும் என் போன்ற சகோதரிகள் இருந்தால் திருத்திவிடும் என்ற ஆசையே அவ்விதம் தூண்டுகிறது. "ஆசை வெட்கமறியாது" என்று சொல்வார்கள். அதென்னளவில் சரியாக யிருக்கிறது. உங்கள் யோசனை என்ன?

சி: இதற்காகவா இப்படி யோசிக்கிறாய்? முதலில் ஒருவிதமாய்த்தானிருக்கும். பழக்கத்தில் வர எல்லாம் சரியாகிவிடும். கற்றோர் குற்றங்களைந்து குணத்தையே கொள்வர். ஆகையால் இவ்வளவில் எழுது. ஏதோ அப்படியாவது உன்னை பொழுது உபயோகமாகட்டும்; எனக்கும் வேலையாகிறது போய் வருகிறேன். நமஸ்காரம்.

நான்: நமஸ்காரம், போய் வாருங்கள்.

—லீலாவதி.

ஓம்.

விவேகானந்த ஆச்சிரமம்,

கோலாலம்பூர்.

—|—

இந்துசமய பாடப் பரீட்சை—1937.

இந்து சமய அபிவிருத்தியின் பொருட்டு கோலாலம்பூர் விவேகானந்த ஆச்சிரம நிர்வாக சபையாரால் நிகழும் ஈசுவர வருஷம் மார்கழி மாசம் 26 தேதி ஞாயிற்றுக்கிழமை (26-12-37) காலை 8-30 மணிக்கு இந்து சமய பாடப் பரீட்சை நடத்தப்படும்.

இப்பரீட்சை இரண்டுவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

(1) கீழ்ப்பிரிவு:—தமிழ் மூன்றும் வகுப்புக்குக் கீழ்ப்படிக்கும் பிள்ளைகளுக்கே உரியது.

(2) மேற்பிரிவு:—தமிழ் மூன்றும் வகுப்பு முதல் மேல் வகுப்புகளில் படிக்கும் 18 வயதுக்குள்பட்ட பிள்ளைகளுக்கே உரியது.

இப்பரீட்சையின் ஒவ்வொரு பிரிவுகளிலும் சித்தியடையும் முதல பத்துப்பிள்ளைகளுக்கு, சுவாமி விவேகானந்தருடைய ஜெனன தினக் கொண்டாட்டத்திலன்று பரிசு வழங்கப்படும். இப்பரீட்சையில் எல்லா இந்துப் பிள்ளைகளும் சேர இடமுண்டு. இப்பரீட்சையில் சேர விரும்பும் மாணவ மாணவிகள் தங்கள் முழுப்பெயரையும், விலாசத்தையும் டிசம்பர் மாசம் 1-ம் திகதிக்குமுன் விவேகானந்த ஆச்சிரம காரியதரிசிக்கு அனுப்பவேண்டும்.

இம்மலாய் நாட்டிலுள்ள இந்துசமய பாடசாலைகளின் அதிபர்கள் தங்கள் வித்தியாசாலைகளின் மாணவ மாணவிகளும் ஏனையோரும் பரீட்சையில் சேர்வதற்குச் சமய பாடங்களை ஆவலிடங்களில் ஆரம்பித்து இந் நன்முயற்சியை ஆலோலமடையச் செய்வார்களாக.

இங்ஙனம்,
த. சபாரத்தினம்,
கௌரவ காரியதரிசி.

விவேகானந்த ஆச்சிரம்ம்,
கோலாலம்பூர்,
4-6-1937

கேள்விகளின் விபரங்களுக்கு கௌரவ காரியதரிசி அவர்களுக்கு எழுதித்தெரிந்து கொள்ளவும்.

—ப—ர்.

சங்கீதம்

—:o:—

உலகத்தில் சிறந்த கலைகளில் சங்கீதமும் ஒன்று. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நாட்டுச் சங்கீதமும், ஒவ்வொரு வித முறையையும், லட்சணத்தையும் கொண்டிருக்கின்றன.

இந்நாட்டில் தமிழ் பெரு மக்கள், முக்கிய மானது தம் தம் பெண் மக்களுக்கு தென்னாட்டுச் சங்கீதத்தையே போதிக்க அவாக் கொண்டு, அத்தகைய பெரு மிதமான, சிலவும் செய்து வருகிறார்கள். இந்தத் தக்கபடி அவரவர்களின் மக்கள் தேர்ச்சியடைந்திருக்கிறார்களா? என்பதை மாத்திரம் "இல்லை" எனும் பதில் தான் கிடைக்கும். இதற்குக் காரணம்,

இக்காலங்களில் ஏற்பட்ட சங்கீத வித்வான்கள், அவர்களுக்கிருந்த இந்த அரசாங்க உதவியால் தங்கள் தோன்றியபடியே பலவிதமாய் பாடி வந்திருப்பது.

2. முறையற்ற, ஞாயமற்ற இவ்வித சங்கீத முறைகளை எந்த ஒருவரும் ஆட்சேபிக்காமல் இருந்தது.

3. உண்மையான கலைவிருத்தியாகும்படி பாடுபடாமை முக்கியமானவைகளாகும்.

மேற்கண்ட விஷயம்,

சுமார் 700 வருடங்களுக்குமுன், தமிழ் நாட்டில் பல சங்கீத நூல்கள் இருந்ததெனச் சொல்லப்படும். "முதுநாரை" "முதுகுருகு" "சிகண்டி" "இசைநுணுக்கம்" "பஞ்ச பாரதீயம்" போன்றவை இருந்தவிடம் தெரியாமல் மறைந்தன. இதன்பிறகு, காஷ்மீர வாசியாகிய சோமநாதரென்பவர், "சங்கீத ரத்னாகரம்" என்னும் நூல் எழுதி, அதில் தனக்கு முன் இருந்து வந்த ராகங்கள் 52 என்றும், தன் காலத்தில் மேலும் 34 ராகங்கள் உண்டாக்கி இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். இவரின் காலம் கி. பி. 1210—1250.

இவருக்குப்பின், அஹோபில பண்டிதர் என்பவர், "சங்கீத பாரிஜாதம்" எனும் ஓர் நூலும், சோமநாதரென்பவர், "ராகவிபோதம்" என ஓர் நூலும், கி. பி. 1475—1553 வருடம்வரை, விஜயநகரத்தின் ஆஸ்தான பண்டிதராயிருந்த கல்விநாத தீக்ஷிதரென்பவர், "கலாநிதி" என்னுமொரு நூலும், இன்னும் பலரும், பலவிதமாய் 300 வருட்ங்களுக்குப்பால் வரையில் ஒரு நிச்சயமில்லாதபடி வெளி யிட்டிருக்கிறார்கள்.

இதன் பிறகு தஞ்சாவூர் மகாராஜாவிடம் மந்திரியாகவிருந்தவரும், 1626-ம் வருடம் வரை ஜீவ தசையோடிருந்தவருமான கோவிந்த தீக்ஷித ரென்பவர், மேற்சொன்ன பல நூல்களிலும், சங்கீதம் பலவிதமாய் தமிழ்நாட்டில் பாவும் வித்தியாசங்களைத் திருத்தியமைக்கு முகத்தான், "சங்கீத சுதாநிதி" என்னுமொரு நூலை தயாரிக்கும் காலை, அவரின் இரண்டாவது குமாரராகிய வேங்கிடேஸ்வர தீக்ஷிதரென்பவர், தன் தகப்பனாரின் சங்கீத சீர்திருத்த விஷயங்களில் ஒத்துப் போகாமல், தானே தன் நோக்கத்திற்கொப்ப "சதுர்தண்டி பிரகாசிகை" என்னுமொரு நூலை, தன் தகப்பன் காலத்திற்கு பிறகு வெளியிட்டார். இவர் கி. பி. 1638-ம் ஆண்டில் தஞ்சாவூரை ஆண்ட மகாராஜாவிடம் மந்திரியாயிருந்தவர்.

இவர் எழுதிய நூலில், நிச்சயமான 12 சுரஸ்தானங்களில் 16, சுரப்பெயர்களைக்கொண்டு இயற்கைக்கு விரோதமாக கற்பித்துவிட்டார். அதன் பிறகு ஏற்பட்ட சங்கீத நூல்களெல்லாம் இவர் காட்டிய, முறையில்லாத, நிந்தனையற்ற வழியாக வேலிவளி வந்துள்ளன.

இந்நூல்களுக்குப்பின், ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்குப்பிறகு, மைசூர் சமஸ்தான வித்வானாகிய, மதுரை பொன்னுசாமிப் பிள்ளையவர்கள், "பூர்வீக சங்கீத உண்மை" என்னுமொரு நூலை எழுதி, அச்சிடுமுன் இறந்து போட்டமையால் அவரின் குமாரர்கள், தங்கள் தகப்பனார் எழுதிய நூலை 1930-ல் வெளியிட்டார்கள்.

இந்த நூல் தன் பெயருக்கேற்ப, அதன் ஆரம்பகாலம் வரையில் நிலவிவந்த பலவேறு வித்தியாசங்களை நன்கு விளக்கிக் காட்டி, சரித்திரத்திற்கும், அநுபவத்திற்கும், ஒத்த முறையிலும், மறுக்கமுடியாத ஆதாரங்களுடனும், அமைந்து பெற்றிருக்கிறது. இந்நூல் வெளியான பின்னே, பெரிய சங்கீத வித்வான்களென்போர்களுட்பட, தாங்கள் அது காறும் செய்துவந்த தப்பிதங்களை உணர்வாயினர். ஆயினும், கலை முன்னேற்றத்தை விரும்பும் அபிமானிகள் தவிர, சுயநலபுத்தியான, சில வகுப்பு வாதிகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாது, வீட்டிற்குள்ளிருந்தே வாய் வேதாந்தம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எந்தக் காரணங் கொண்டும் இதன் போக்கைக் கண்டிக்க வகையில்லாத, சங்கீத உலகுக்கே ஓர் சிறந்த நூலாகிய இதை மன்பூர்வமாய் உதறியச் செய்வதில் பின் வாங்கும் காரணமென்ன? இங்கு தான் வகுப்புவாதம் தலை விரித்தாடுகின்றது.

எனினும், உண்மை யுண்மையே. ஏதும் பெரு தோக்கில் இன்றைய தென் இந்தியாவில், சங்கீத த்தில் சிறிதே தேர்ச்சியுள்ளவரும், பெரும்பித் வான்களென்றவர்களும், இப் "பூர்வீக சங்கீத உண்மை" யெனும் நூலின் உதவி கொண்டு, நிச் சயமான கலையை யுணர்ந்து வருகிறார்களென்ப தில் ஐயமில்லை.

சங்கீத உலகுக்கே ஓர் சூரியன் போல் விளங் கும், "பூர்வீக சங்கீத உண்மை"யைப்பின் பற்றி, நாதம், நாதத்தால் சுருதி, சுருதியால் சுர அமைப்பு, முதலிய சகல விவரங்களையும் இவ் "வழிகாட்டி"யின் மூலமாக ஒவ்வொரு மாதமும் வெளியிட விரும்பிய என் எண்ணத்திற்கு ஆசரவு காட்டிய "வழிகாட்டி" பொறுப்புவாய்ந்த சிரு வாகஸ்தர்களுக்கு என்றும் என நன்றி உரித்தா குக.

நமசிவாய வாழ்க! நாதன் தாழ் வாழ்க!!

(மகேஸன்.)

இறையுண்மை விளக்கம்.

"உலகத்தாருண் டென்ப தில்லென் பான் வையத் தல கையாய் வைக்கப்படும்." (பொய்யா மொழி)

தற்காலத்திற் சிலர் கடவுளில்லையெனச் சாதித் தும் பிரசங்கித்தும் பெருந் தொகையான பொரு செலவழித்துப் புத்தகங்கள் எழுதி அச்சிடு பாப்பிக்கொண்டும், தங்கள் வாழ் நாளை யும் வீண் நாளாய்க் கழிக்கின்றார்கள்.

கடவுளாகிய ஒரு முதலும், அவரால் உலகு உயிர்கள் சிருட்டிக்கப்படுதலும், சிருட்டிக்கப் பட்டவைகளெல்லாம் முறையே நீதிப்படி நடத் தப்படுதலும் இல்லை. ஆனால் எல்லாம் தாமே தோன்றி அழிகின்றனவென்பர்.

அங்ஙனமாயின், உயிர்கள் வாழ்தற்கிடமான உலகத்தையும், அவ்வுலகை அறியத்தக்க பஞ்சப் பொறிகளையும், அவை வழியாகப் பகுத்தறிந்தனு பவிக்கும் தனுகரணங்களையும், அவற்றாலனுப விக்கப்படும் பல பொருள்களையும், அவற்றிற்கு மழை பெயல், இராச நீதி முதலியவைகளையும், அவை நிகழும் காலம், இடம் முதலியவைகளை யும், அவற்றாற் பெறுஞ் சுகதுக்கப் பேறுகளா கிய அனுபவங்களையும், தாம் தாம் விரும்பியபடி யே பெறவும், தவிர்க்கவும் கூடியவராகவும், தம் வயத்தராகவுமிருத்தல் வேண்டும். அங்ஙனங் காமையால் ஒருவரும் தம் வயத்தரல்லரென்ப தும் தமக்குத் தலைவராகிய கடவுள் வயத்தரென் பதும் பெறப்படும்.

அன்றியும், கடவுளில்லையெனவே நல்வினை தீவினையாகிய புண்ணிய பாவங்களும், அவற்றால் உயிர்கள் பொருந்தவேண்டிய இன்ப துன்பங்க ளும் இல்லையென முடியும். ஆகவே உயிர்களும் அவை பொருந்தும் காலம், இடம், பொருள் ஏவல், தனுகரண முதலியவைகளும், அவற்றால் அநுபவிக்கும் சுக துக்கங்களாகிய அனுபவங்களும், பல பேதங்களாயும், காலந்தோறும் மாறுபடுவன வாயுமன்றி எவ்வுயிரும், எக்காலமும், எவ்விடமும், எப்பொருளும், எவ்வனுபவங்களும் யாவருக்கும் ஒரே விதமாயிருத்தல் வேண்டும். அங்ஙனமில்லா மையால் சர்வ வியாபகமும், சர்வஜ்ஞத்துவமு முடையவராகிய கடவுளே முதற் உயிர்களியற்றும் பாவ புண்ணியங்களுக்கு காலம், இடம், பொருள், ஏவல், தனுகரணங் யெல்லாங் கூட்டி அவை வழியாகவே போகங்களை முறைப்படி அநுபவிக்கு படி உறுவித்து கடத்துகிறாரென்ற சித்தாந்தமானது வலிய லில்லையெனக் கூறல் அம்முறைமைகளை வற்றையும் தெளிவாய் உணராமையோ, அன்றேல் உணர்ந்த மகான்களாயிருந்தும் உலகிற்பேராசை யினால் பலரையும் ஒரு காற்றிகைப் புறச் செய்வ தோர் விளையாட்டேயோ யாம் அறிகிலம்.

அறிவாலுயர்ந்த மகான்களுக்கு இயல்பாயுள்ள குணங்களும், இன்றியமையாச்செயல்களும் எவை யெனில், உலகத்தில் தமக்கும், பிறர்க்கும் ஒருவரு மன்றும், எத்திறத்தாலும், அறம், பொருள், இன்ப ங்களாகிய, நல்ல மனம், வாக்குச்செயல்களையுடை யவராயும், தீச்சிந்தையும், தீச்சொல்லும் இல்லா தவராயும், அமைந்தொழுகல் முதலியனவாம். அவர் அவ்வாறு ஒழுகுதலே விட்டுக் கடவுளில்லை யெனக் கூறுவராயின் அக்கூற்றுத் அதனைக் கேட்கும் பிறர்க்கும் பயன் பயனில் சொல்லாக முடிவதுமன்றித் ருமான உலகோர் யாவரும் அடைகிற பொருள், இன்பங்களைக் காலந்தோறும் தித்து முற்றுய்க் கெடச் செய்து பாவம், வறுமை, அச்சம் முதலியவைகளைப் பிற பிப்பதற்காதாரமாகிப் பிறர் நேசமின்றியும், தன் நேசமுணராமலும் அரசனில்லாத குடிகள் போல் ஒருவரால் ஒருவர் தாக்குற்றுப் பாவத்தையும், பழியையும் பெருக்கி அழியச்செய்வதோர் தீய வசனமாகும். அக்கொடிய வசனத்தைச் சொல் லப்புகுவோர் எத்திறத்தாரோ யாம் அறிகிலம். தற்காலம் அவரிங்ஙனம் சாதித்தும், தாங் கெடுதி யடையாமல் நிலை பெற்றுச் சந்தோஷமாக வாழ் தற்குக் காரணமாயிருப்பது, பிறரெல்லாம் ஆஸ்

திகர்களாய்ச் சூழ்ந்திருக்கும் அறக்கூட்டமே யாமென உணர்க்கடவர். ஆகவே அவர் கடவுளி லீடுபெனச் சரித்திரைக்கும் உரைகளால் அவர் கீழும் பிறர்க்கும் பயனின்மையும், கெடுதியுண்மை யும் ஒரு தலையாகலின் அவற்றை இனிக் கூறு தொழிவதும் கூறியவற்றைக் கேழாதொழிவதுமே யாவர்க்கும் கடனுமென வறிக.

"நாஸ்திகம் சொல்கின்றவர் தம் நாக்கு முடை நாக்கு" என்பது அருட்பா.

உலகினை யளித்தாய் உயிர்எலாம் வாழ்ந்தே
உன்னொளி காணுதற் பொருட்டே
தலமே செய்து காலமே கழித்துக்
கீடவுளே! உன்னையும் மறுத்தே
அலகையால் உயிர்கள் அழி நிலை நோக்கி
அடியேனன் படுத்துயரறிவாய்
நிலைகாய்ப் பொலியுஞ் சென்னி வாழ் சிவமே!
தீவினையைக் களைந்தருள் செய்யே"

திரு. வி. க.

"இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான்
தோற்றி
இறைவனே எண்டி றக்கஞ் செய்வான்—
இறைவனே
எந்தாயினன் விரங்கும் எங்கண்மேல்
இவந்துயரிம்
வந்தாலது மாற்றுவான்"

—புனிதவதியார்.

பாலர் பகுதி.

கோயில்.

மணியன்:—அக்கா! நாளைய தினம் நல்லூர் கந்தசுவாமி கோயில் கொடி ஏற்ற திருவிழா அல்லவா? நாம் நாளைக்கு நல்லூரில் கந்தனிடம் போக வேண்டாமா?

அக்கி:—அப்படியே செய்யலாம். நாளைக்கு வெள்ளிக்கூடம், கொடி ஏற்றத்துக்காக விடுதலை தானே! வா, அம்மாவிடம் கேட்போம்.

மணியன்:—அம்மா! நாளைக்கு நல்லூருக்குப் போகலாமா?

தாயார்:—மணியா! எதற்காக நல்லூருக்குப் போகவேண்டும்.

மணியன்:—அம்மா! திருவிழா காலத்திலாகுதல் நாம் கடவுளை வணங்க வேண்டாமா?

தாயார்:—மணியா, கடவுள் உன்னையும் உனது சகோதரர்களையும் காப்பாராக. கடவுள் ஒருவரே. அவர் உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் மனிதருக்காகப் படைத்தார். நாம் அவரை ஒருபோதும் மறக்கலாகாது. நீங்கள் விரும்பியபடியே நாளைய தினம் உங்கள் தந்தையுடன் நாம் எல்லோரும் நல்லூருக்குப் போய் வருவோம்.

மறுநாட் காலையில் மோட்டோர் கார் வந்துவிட்டது.

தாயார்:—இதோ மோட்டோர் கார் வந்துவிட்டது. கவனமாக ஏறுங்கள்.

கார் கோயிலுக்கு வந்து சேர்ந்தது. எல்லோரும் கோயிற் கேணிக்கு வந்து சேர்ந்தனர். கை கால் முகம் முதலியவைகளை சுத்தஞ் செய்து கொண்டு கோயிலுக்குள் சென்றனர். கோயிலை வலம் வந்து கடவுளை வணங்கினர். பிற்பாடு ஒரு இடத்தில் அமைதியாய் நின்று திருவிழாவைப் பார்த்தனர்.

ததி அவ்விடத்தில் இருந்த குருடர், முடவர் கிழவர் முதலியவர்களைக் கண்டு மனமிரங்கினாள். தந்தையிடம் சொல்லி அவர்களுக்கு காசு கொடுக்கும்படி செய்தாள். தின்பண்டமும் விளையாட்டுப் பொருள்களும் பெற்றோரிடம் சொல்லி வாங்கிக் கொண்டு மறுபடியும் காரில் ஏறி எல்லோரும் வீடுவந்து சேர்ந்தார்கள்.

வ. ந.

கடிதம்.

பத்திராதிபர்
"வழிகாட்டி"

ஐயா, மலாயாவில் யாழ்ப்பாணத்தவர்களுக்கென்று ஒரு பத்திரிகையாவது, மாதசஞ்சிகையாவது இல்லாத குறையை 'வழிகாட்டி" இவ்வாண்டு புது வருச தினத்தன்று நல்வரவாய் உதித்து தீர்த்தாள். யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க தலைவருக்கும், மற்றும் தலைவருடன் ஒத்து உழைத்து இந்த வழிகாட்டியை ஈன்று நமக்கு உகந்த பேரியார்களுக்கும் எமது அன்பார்ந்த நன்றி உடன்பாடாகுக. யாழ்ப்பாணத்தவர்கள் வழிகாட்டியை செவ்வையாக வளர்த்து வருவார்களாக.

எங்கள் பாலர்கள் வாசித்துமகிழக்கூடிய விசயங்கள் யாதும் இதுவரைக்கும் சஞ்சிகையின் இதழ்களில் வெளிவரவில்லை. ஆனதால் இத்துடன் அனுப்பப்படும் பால பாடங்களை தகுதியுள்ளதாகக் கண்டால் அதேத சஞ்சிகையில் வெளியிடும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இவை தகுதியற்றனவென விலகப்படின் எழுத்துவல்லாளர் கள் பாலர் பகுதிக்கு ஏதும் எழுதச் சொல்லி வேண்டப்படும் செய்தல் நலம் என்றது எனது அபிப்பிராயம். பாலர் பகுதிக்கு ஒருதரம் ஏதும் வேளிவரின் அதைப் பின்பற்றி மேலும் மேலும் விசயங்கள் வேளி வந்துகொண்டிருக்கும் என்பது எனது நோக்கம். இந் நோக்கம் கொண்டே எழுதலானேன்.

இங்ஙனம், தங்கள் அன்பு நிறைந்த

வ. ந.